வாரப் பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்

# SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO -12.

USHA உஷா
தையல் மெஷின்கள் சகாய விலைகள்
மடக்கும் மாதிரி (போல்டிங)
மெஷின் ரூ 395
சாதாரண கால் (டிரிடல்) ,, ரூ 371
கை ,, ரூ 265
சோல் ஏஜண்டு:- G H REIMOO
17, நியூ சோனகத்தெரு கொழும்பு
டெலிபோன் 6060

புத்தகம் 6 இதழ் 7 Registered as a News Paper at the G. P. C நந்தன ஹூ ஆனிமீ 30 (13-7-52) ஞாயிறுக்கிழமை ஷவ்வால் பிறை 20

# 100 குடும்பங்களுக்கு வெளியேற்ற உத்தரவு

## கல்-ஓயா அபிவிருத்தி சபையின் கல் நெஞ்சு நடவடிக்கை

(நமது நிருபர்)

கல்-ஓயா அபிவிருத்தி சபையின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் சுமார் 100 ஏழைக் குடும்பங்கள் தங்கள் தட்டுமுட்டுச் சாமான்களை எடுத்துக்கொண்டு உடனே வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப் பட்டிருக்கிறார்கள்.

இப்படித் திடீரெனக் குடியெழுப்பப்படும் குடிகளில் பெரும்பான்மையானவை தமிழ்க் குடும்பங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஏழைக் குடும்பங்கள் இடம் பெயர வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கும் அரசாங்கம் அவர்களுக்கு வேறு எங்காவது ஏற்றபடி இடம் அமைத்துக் கொடுக்க எவ்வித முயற்சியும் செய்யவில்லையென்று தெரிய வருகிறது.

"மேற்படி குடும்பங்கள் குடி எழும்பத் தாமதித்தால் சபையின் அதிகாரத்தில் வேலைபார்க்கும் வேலையாட்கள் படையின் உதவியோடு பலாத்காரத்தை உபயோகித்தேனும் அவர்களை வெளியேற்றிவிடுங்கள், அவர்கள் அங்கு கட்டியுள்ள குடிசைகளை நிர்மூலம் செய்துவிடுங்கள்" என்று ஸ்தலத்தில் வசிக்கும் சபை மனேஜர் தமது சுற்று நிருபத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

கல்-ஓயா ஏழை விவசாயிகளின் சொர்க்கமாக விளங்கப்போகிறது என்று ஒருபுறம் பிரசாரம் நடைபெறுகையில் கல்ஓயா அபிவிருத்தி சபையின் மேற்படி ராவண தர்பாரைப் பார்த்து கல்ஓயாவுக்காகக் கசிந்துருகிக் கண்ணீர் விட்டுப் பாடும் மட்டக்களப்புப் பகுதி யு. என். பி. அங்கத்தவர்கள் என்ன சமாதானம் சொல்லப்போகிறார்கள்?

### நெசவுத் தொழிலாளர் சத்தியாக்கிரகம்

1952, ஆனி 30-ந் தேதி கூடிய சுன்னாகம் நெசவாளர் ஐக்கிய சங்கக்கூட்டத்தில், அரசாங்கம் ஏற்கனவே வாக்களித்தபடி நெசவுத்தொழிலை வளர்க்க உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கத் தவறிவிடுமாயின், வடபகுதி நெசவாளர் சங்கங்களுடன் சேர்ந்து சத்தியாக்கிரகம் செய்து நன்மைகளைப் பெறுவதென்று முடிவு செய்யப்பட்டது.

### இலவச வீடு கிடையாது

—

### கன்னங்கராவின் கைவிரிப்பு

"சில வருடங்களுக்கு முன்பு நான் உங்களுக்கு இலவசக் கல்வி முறையை அளித்தேன் நீங்கள் என்னை அந்தோனேஷியாவுக்கு அனுப்பிவைத்தீர்கள் இப்பொழுது நான் உங்களுக்கு இலவசமாக வீடுகளைக் கொடுப்பேனென்று எதிர்பார்க்கவேண்டாம்" என்று மந்திரி கன்னங்கரா கடந்த வாரம் தெஹிவலயில் ஒரு கூட்டத்தில் பேசும்போது கூறினார். ஏழை மக்களுக்கு அரசாங்கம் எவ்வாறு நிவாரணமளிக்கப் போகிறதென்பதை ஸ்தல ஸ்தாபன மந்திரியின் இப்பேச்சு அம்பலப்படுத்திவிட்டது.

## சிரில் டி சொய்ஸா ராஜினமாவின் காரணம்

யு. என். பி. காரியக் கமிட்டி அங்கத்தினரும், செனட் சபையில் உபதலைவரும், பிரதான அரசாங்க கொந்தராக்காரரும் பிரபல பஸ் முதலாளியுமாகிய திரு சிரில் டி. சொய்ஸா யு. என். பி.யிலிருந்து ராஜினாமா செய்துவிட்டார். அவரது ராஜினாமாவுக்கு இரு காரணங்கள் கூறப்படுகின்றன.

அவருக்குச் சொந்தமான கட்டிடத்தில் தான் "ட்ரைன்" பத்திரிகைக் காரியாலயமிருக்கிறது. "ட்ரைன்" பத்திரிகையில் யு. என். பியின் தேர்தல் வண்டவாளம் அம்பலப்படுத்தப்பட்டதால், அக்கட்டடத்திலிருந்து "ட்ரைன்" காரியாலயத்தை அகற்றும்படி திரு சொய்சாவை யு. என். பி. தலைமை நிர்ப்பந்தித்ததாம். அவர் அதற்கு மறுத்துவிட்டதால் கட்சியிலிருந்தே வெளியேற வேண்டியதாயிற்று.

செனட் சபைத் தலைவர் சேர். ஜெரால்ட் விஜயகோன் பதவியிலிருந்து விலகுவதால் தனக்கு அப்பதவியைக் கொடுக்கும்படி திரு சொய்ஸா கேட்டாராம். ஆனால் இங்கிலாந்தில் இலங்கை ஹை கமிஷனராகவிருக்கும் சேர். ஈ. ஏ. பி. விஜயரத்ன சமீபத்தில் இலங்கைக்குத் திரும்புவதால் அவருக்குத்தான் அந்தப் பதவி கொடுக்கப்படுமென்று யு. என். பி. தலைமை தெரிவித்ததின்மீது அவர் ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்றாம்.

## மருமகன்தான் காரியதரிசியாக வேண்டும்

—o—

## மந்திரியின் பிடிவாதம்

உற்றார் உறவினர்களுக்குச் சலுகை காட்டும் ஓர் வஞ்சகம் சேனநாயக்க அரசாங்கத்தில் ஏற்கனவே வேரூன்றிவிட்டது.

பலவேறு அரசாங்கப் பதவிகளுக்கு உத்தியோகஸ்தர்களை நியமனம் செய்யும் விஷயத்தில் பொக்கிஷ இலாகாவுக்கும் மந்திரிகளுக்குமிடையே தகராறு ஏற்பட்டிருக்கிறது.

ஒரு மந்திரி அந்தரங்கக் காரியதரிசி பதவிக்குத் தனது மருமகனை நியமனம் செய்ய வேண்டுமென்று மனுச் செய்திருந்தார். ஆனால் பொக்கிஷ இலாகா இதை மறுத்துவிட்டதென்று தெரிகிறது. ஆனால் மந்திரியோ மருமகன்தான் வேண்டுமென்று பிடிவாதம் செய்கிறார். ஆகவே இறுதி முடிவுக்காக இப்பிரச்னை பிரதமருக்கு அனுப்பிவைக்கப் படுமென்று தெரிகிறது.

## அன்றுமுதல் இன்றுவரை நமது போராட்டம்

(இ. இ. காங்கிரஸ் பொதுக்காரியதரிசி திரு கே. ஜி. எஸ். நாயர் எழுதுவது)

இலங்கை இந்திய காங்கிரஸின் ஆதரவில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்து இன்றுடன் (13-7-52) 79 நாட்களாகின்றன.

இலங்கைவாழ் இந்தியர் பிரச்னையானது டொனமூர் ஆட்சி முறையை இலங்கையில் சுமத்திய நாளிலிருந்து படிப்படியாக இந்தியர் துவேஷம் உரம்பெற்று வந்திருக்கிறது இது 1938ல உச்சநிலையடைந்தது. பல்லாயிரக்கணக்கான சுமார் 1300 இந்திய தொழிலாளர்களை ரயில்வே பொது மராமத்து இலாகா ஆகியவைகளிலிருந்து வெளியேற்றப்பட்டு நாடு கடத்தப்பட்டனர் இன்னும் அதைத் தொடர்ந்து பலபல சட்டங்களும் இந்நாட்டில் இயற்றப்பட்டன. அதில் முக்கியமானது என்னவென்றால் இந்தியத் தொழிலாளர்களுக்கு கிராமக் கமிட்டிகளில் வாக்குரிமையில்லாமல் செய்ததேயாகும்.

அன்றுமுதல் இன்றுவரை இலங்கை அரசாங்கத்துடன் ஓர் சமரசமான முடிவிற்கு வர வேண்டுமென்ற நோக்கத்தோடு இலங்கை இந்திய காங்கிரஸ் தர்ப்பித்து வந்திருக்கிறது. 1943லும் 1944லும் திரு டி. எஸ். சேனநாயகா அவர்களிடம் இ. இ. காங்கிரஸ் ஓர் மகஜரைச் சமர்ப்பித்து சமரசமான முடிவை உண்டாக்க ஓர் வட்ட மேஜை மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென விண்ணப்பித்துக்கொண்டது. அதற்கு காலஞ்சென்ற பிரதமர் இணங்கவில்லை என்பது மாத்திரமல்ல, இலங்கை அரசாங்கம் எவ்வித சமரசப் பேச்சுகளும் இந்திய அரசாங்கத்துடனல்லாது, இலங்கை இந்திய காங்கிரசுடன் நடத்த முடியாது என்று கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

அதற்குப் பின்பும் பல தடவை இலங்கை இந்திய காங்கிரஸ் முயற்சித்தது. 1946ல் இப் பிரச்னையை சட்டசபையில் அனுதாபமுள்ள பிரதிநிதிகள் கொண்டுவந்தபொழுதும் காலஞ்சென்ற பிரதமர் இப்பிரச்னையை பண்டித ஜவஹர்லால் நேருவிடம் பேசி முடித்துக்கொள்ளப்போவதாகத் தெரிவித்தார் அதன் பிறகு புதுப்பார்லிமெண்ட் தேர்தல் நடைபெற்று புது மந்திரி சபை அமைக்கப்

(9ம் பக்கம் பார்க்க)



திரு கே. ஜி. எஸ் நாயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

## வரி விளம்பரம்

வரி ஒன்றுக்கு 50 சதம். 6 வரிகளுக்கும் அதற்குக் குறைந்ததற்கும் ரூபாய் 3-00

### தேவை

கொழும்பில வசிக்கும் ஒரு கண்ணியமான, குழந்தைகள் இல்லாத தமிழ் குடும்பத்திற்கு சமையல் வேலை செய்ய நடுத்தர வயதுடைய வேலைக்காரி தேவை. L. A. I. C/o சுதந்திரன்.

வின்ஸ்லோ பாதிரியாரின் தமிழ் ஆங்கில அகராதி தேவை.
எஸ். ஆர். 196, தட்டாதெரு கொழும்பு.

டபிள் டிமை சைஸ் பத்திரிகை அடிக்கக்கூடிய செலிஸ் உடனடியாக தேவை விண்ணப்பிக்க.
மானேஜர், சுதந்திரன்
194, ஏ தட்டாதெரு.
கொழும்பு-12.

### வியாபாரம்

எச். எம். வி. போட்டபிள் கிராமபோன் ஒன்று விற்பனவுக்குண்டு ஆறு உயர்தர றெக்கோட்டுகளுடன் விலை ரூ 100-00 வாங்கி ஒரு மாதம் இல்லை. புதியநிலையில் இருக்கிறது. L. A. 2. C/o சுதந்திரன்

மிஸ் கனகம்-புதுமையான நாவல் 35 பக்கங்கள். தெள்ளிய தமிழ்நடை. விற்பனவு ஏஜண்டுகள் தேவை நல்ல கமிஷன் தரப்படும்.
156, தட்டாதெரு,
கொழும்பு.

### விற்பனைக்கு

ஒரு வருடம் பாவித்த றெலி சைக்கள் விற்பனைக்குண்டு. டைனமோ, பம்பு, காரியர் எல்லாம் இணைக்கப்பட்டிருக்கிறது விலை குறித்து எழுதுக.
L. A. 201
C/o சுதந்திரன்


### ஷெட்யூல்ட் வகுப்பினருக்கு சலுகை

புதுடில்லி—

கெஜட் பதிவில்லாத ஸர்வீஸ் அல்லது பதவிக்கு நியமனம்செய்வது சம்பந்தமாக உள்ள அதிக பட்ச வயது எல்லையை, ஷெட்யூல்ட் வகுப்பினர் ஷெட்யூல்ட் மலை ஜாதியினர் இவர்கள் விஷயத்தில்ஐந்து வருஷம் அதிகரிக்க இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளது.

### கொரியா போரில் ரஷிய செலவு

லண்டன்—

கொரியப் போரில் ரஷ்யா ஒவ்வொரு மாதமும் 10,000,000 பவுன் செலவழித்து வருவதாக கொரியாவிலுள்ள ஐ. நா. அதிகாரிகள் கூறுகின்றனர்.

காசி—

ஆசாரியா வினோபாவேயின் பூதான யக்ஞத்துக்கு இதுவரை 280,000 ஏக்கர் நிலத்துக்குமேல் தானமாகக் கிடைத்துள்ளது.

## கேட்டுப்பாருங்கள்

குயுக்தி

"மாரன்" மீசாலை

கே: கோயில் என்றால் என்ன?

ப: கோயில் என்பது கோழையின் புகலிடம், காமுகர்களின் கார்னிவல், மத குருக்களின் தொழிற்சாலை, பயந்தவர்களின் பஜனை மடம்.

கே: காதல் கூடினால்...?

ப: காதல் கூடினால் கல்யாணம் கல்யாணம் கூடினால் கடிபிடி. கடிபிடி கூடினால் கைக்குழந்தை கைக்குழந்தை கூடினால் கரைச்சல்.

கே: இன்னும் சிலகாலத்தில் சந்திர மண்டலத்திற்குப் போகலாம் என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்களே நட்சத்திர மண்டலத்திற்குப்போக முடியாதா?

ப: ஏன் முடியாது? மாதுரிதேவி, நர்கீஸ், பானுமதி மதுபாலா போன்றவர்களிடம் கேட்டால் எத்தனைபேர் ஏற்கனவே வந்துவிட்டார்கள் என்ற விவரத்தைக் கூறுவார்கள்.

* * *

எஸ். சுப்பையா, தலவாக்கொலை

கே: இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர்களை எதற்கு ஒப்பிடலாம்?

ப: பழக்கப்பட்ட யானைக்கு ஒப்பிடலாம் யானைக்கு தன் சொந்தபலம் தெரியாது. அதுபோலத்தான் இந்தத் தலைவர்களுக்கும்.

கே: இடதுசாரிகளின் தோல்வி எதைக் காட்டுகிறது?

ப: இதுகூடத் தெரியாதா? வலதுசாரிகளின் வெற்றியைக் காட்டுகிறது.

* * *

எஸ். ஆர். கொட்டாஞ்சேனை

கே: கோல்பேஸில்நடந்த யு என். பி. கூட்டத்தின் போது யு. என். பி என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஒரு பட்டம் (காற்றாடி) உயரப் பறந்ததே, அது ஏன்?

ப: இரண்டு காரணங்களுக்காக அது பறக்கவிடப்பட்டிருக்கலாம். ஒன்று தேர்தல் ஊழல்களினால் யு. என். பியின்மானம் காற்றில் பறக்கிறது என்பதைக் குறிக்க, மற்றது இதே மேடையில் கூறப்படும் வாக்குறுதிகள் எல்லாம் வரும் ஐந்து வருடகாலத்தில் காற்றில் பறக்க விடப்படும் என்பதைச் சூசகமாகக் குறிக்க

* * *

பத்மா, பாண்டிருப்பு

கே: உலகில் உள்ள ஒலிபரப்பு நிலையங்களில் அதிக சக்திவாய்ந்தவை எவை?

ப; மாதர் சங்கங்கள்.

கே: பணக்காரர்கள்செய்யும் தர்மம் எப்படிப்பட்டது?

ப: இரும்பை விழுங்கியவன் சுக்குத் தண்ணீர் குடிப்பது போன்றது.

கே: மானம் இழந்த பெண்ணை எதற்கு ஒப்பிடலாம்?

ப: ஒருமுறை தபாலில் ஒட்டப்பட்ட முத்திரைக்கு ஒப்பிடலாம்.

* * *

"சிவம்" யாழ்ப்பாணம்

கே: தந்தியென்றால் என்ன?

ப: உரிய காலத்தில் கிடைக்காமல் பிந்திக் கிடைக்கும் ஒரு வஸ்து.

கே: பிச்சைக்காரர்களைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்.

ப: அவர்கள்மீது எனக்கு எப்போதுமே அனுதாபம் உண்டு. அவர்கள் என் சட்டைப் பையைச் சோதித்தாலும் பொறுத்துக் கொள்வேன். ஆனால் சில்லறை இல்லாதபோது அவர்கள் என் பொறுமையைச் சோதிப்பதைத்தான் என்னால் பொறுக்க முடிவதில்லை.

* * *

சி ஐ டி. காலி

கே: நம் பாராளுமன்ற எதிர்க் கட்சிகளின் எதிர்காலம் என்ன?

ப: காலம் எல்லாம் எதிராயிருப்பதுதான்.

கே: மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாதென்று திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் கூறினாரே அது சரியா?

ப: அதாவது அவர் கட்சிக்கு எதிரான தமிழ் அரசு அரசியலில் ஈடுபடக் கூடாது என்பதுதான் அவர்கருத்து. ஆனால் அந்த முட்டாள் திருவள்ளுவர் தமது குறளில் அரசியல் என்று ஒரு பகுதியையும் வகுத்து அதை மாணவர்கள் தலைக்குள் வேறு புகுத்த வேண்டும் என்று ஏன் எழுதித் தொலைத்தார் என்பதுதான் நமக்கும் பொன்னம்பலத்திற்கும் விளங்கவில்லை!

> **பரிசு ரூ. 3-00**
>
> யாரும் கேள்விகள் அனுப்பலாம். ஆனால் கேள்விகள் போஸ்கார்ட்டில் மட்டுமே எழுதப்படவேண்டும் தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமுமான பதில் கிடைக்கக்கூடிய சிறந்தகேள்வியை அனுப்புபவர்களுக்கு ரூ 3-00 பரிசு வழங்கப்படும்.

* * *

'காம்ரேட்' கடுகண்ணாவை

கே: ஐயா குயுக்தியாரே, நீர் ஒரு கம்யூனிஸ்ட் என்று ஒரு யு. என். பி நபர் கூறுகிறார். இது உண்மையா?

ப: யு. என். பி. காரர்கள் நம்மைக் கம்யூனிஸ்ட் என்பார்கள். கம்யூனிஸ்டுகள் நம்மை முதலாளி வர்க்கத்தான் என்பார்கள். முதலாளிகள் நம்மை வகுப்புவாதி என்பார்கள். வகுப்புவாதிகள் நம்மை விபீஷணன் என்பார்கள். ஆனால் நாம் மட்டும் நம்மை தேசியவாதி என்று சொல்லிக் கொள்ளுகிறோம். இதுதான் உலகம்!

கே: ரஷ்யா என்றால் என்ன?

ப: தொழிலாளியின் கனவு லோக இன்பபுரி. முதலாளியின் யமலோகம், அமெரிக்காவின் சிம்மசொப்பனம்.

* * *

சு. ம திரிகோணமலை

கே: உலகில் பிரபலமான சோதிடர்கள் எங்கு இருக்கிறார்கள்.

ப: பத்திரிகாலயங்களில். அரசியல் சோதிடத்தில் அவர்கள் விற்பன்னர்கள்.

கே; என் மகள் வயது 18. ஒரு பையன்மீது காதல் கொண்டு வாடுகிறாள். அவள் அவனை நிரந்தரமாக வெறுக்கும்படி செய்வதற்கு மார்க்கம் என்ன?

ப: அவனை உம் மகள் வெறுக்க வேண்டும், அவ்வளவுதானே? முன் பின் யோசியாமல் பையனைப் பிடித்து உம்மகளுக்கு கலியாணம் செய்து வைத்துவிடும். இரண்டு மாதத்தில் உம் விருப்பம் நிறைவேறிவிடும்.

* * *

'சந்தேகி' சாய்ந்தமருது

கே; இவ்வளவு அழகாக நீர் எப்படிப் பதில் எழுதுகிறீர், குயுக்தியாரே?

ப: ஏன், சாதாரணமான ஒரு பாக்கர் பேனாவினால் தான்.

கே: பழைய மோஸ்தரான நாடகங்களைப் பார்க்க ஆசையாகவிருக்கிறது. அதில் வரும் பபூன்களை வேறு எங்குதான் காண முடியும்?

ப; ஏன், யு. என். பி. மந்திரி சபையில் காணலாமே. நமது லி டபிளியு. டபிளியு. கன்னங்கராவுக்கு சமதையான பபூன் இந்தத் திரிபுவனத்திலும் கிடையாது.

* * *

சி. கே. துரை சுன்னாகம்

கே: இந்தக்கால கல்லூரிப் பெண்களுக்கு குடும்ப வாழ்க்கையில் தெரியாதது ஒன்றுமில்லை.

ப; ஒன்றுண்டு அவர்களுக்குச் சமைக்கத் தெரியாது.

கே: என்னுடைய மனைவியைப் பார்த்து சிலர் சதா பல்லைக்காட்டுகிறார்கள். அவர்களை என்னசெய்வது?

ப: அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம். நீர் ஒரு பல் டாக்டர் என்று அவர்கள் காதில் போட்டு வையும்.


# தங்க பஸ்பம்

## நரசிங்க லேகியம்

நரசிங்க லேகியத்தில் அருமையான வேர் வகைகளின் சத்துக்களும் ஆயுளை வளர்க்கும் கற்ப மூலிகைகளும் சேர்ந்திருக்கின்றன. இதில் தங்க பஸ்பம் சேர்த்துச் சாப்பிட்டால் தசைநார்களுக்கும் நரம்புகளுக்கும் உணவூட்டப்பெற்று ஆண் சிங்கம்போன்ற திடகாத்திரம், வாலிபம் உண்டாகும் லேகியம் தனியாகவும் சாப்பிடலாம்.

| | | |
|---|---|---|
| 40 நாள் (80 வேளை) தங்க பஸ்பம் | ரூ | 40-0-0 |
| ,, ,, நரசிங்கலேகியம் | ரூ | 20-0-0 |
| 20நாள் தங்க பஸ்பமும் நரசிங்கலேகியமும் | ரூ | 30-0-0 |

பார்சல் செலவு ரூ. 2-0-0 சேர்த்து M. O. அனுப்பவும்.

### கேட்லாக் இனாம்.

## தண்டபாணிவைத்யசாலை

பெரிய கடை வீதி, பழனி (S. I.)
THANDAPANI MEDICAL HALL, PALANI (S. India)

# ஆனந்தா லேகியம்

முக்கிய கவனிப்பு:-
ஆனந்தா வைத்தியசாலை
நீர் 174,
என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்துவாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தைசுகமாககழித்து, அசதி, சோம்பல், மேல் கால் கைகணுக்களில்வலி, அஜீரணம், பசியின்மை, பித்தவாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள்முதலிய அநேக வியாதிகள் தீரும் பத்தியமில்லை

பெரியது விலை ரூ 5-75. சிறியது விலை ரூ 3-00

"ஆனந்தா கீழ்காய் நெல்லித் தைலம்" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்கு பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகட்கும் விபரமடங்கிய கேட்லாக இனாமாக அனுப்புவோம்

புரோப்ரைட்டர்:- M. பொன்னையா

## ஆனந்தா வைத்தியசாலை

நீர் 174, A செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

புதுமை இலக்கியப் பூங்கா:

# ★ கணவனை இழந்த கன்னிக்கு கை கொடுத்த காளை

## எதிர்ப்புக்களைக் கண்டும் கலங்காத திட உள்ளம்

-தமிழ்ப் பித்தன்-

மலர்ந்த தாமரைகள் நிறைந்த குளம் காலையிளம் சூரியன் கங்குலைக் கடிந்து தன் பொன்னொளி பரப்பும் நேரம். தூங்கிக் கிடந்த குருவிக் கூட்டங்கள் சிறகடித்துப் பறந்து சிங்காரப் பண் பாடும் வேளை.

இந் நேரம் குப்பன் என்ற இளங்காளை காலை அழகைப் பார்த்துப் பூரித்த உள்ளத்துடன் அந்தக் குளக்கரை வழியாக நடந்து சென்று கொண்டிருந்தான். இயற்கையழகிலே ஒன்றி இன்பப் பாதையில் ஏறு நடைபோட்டபடியே நடந்த அந்த இளைஞனின் பார்வை குளத்தை நாடியது. அந்தக் கணமே கால்களும் கண்களும் தமது கடமையை மறந்தன.

தாமரை மலர்கள் நிறைந்த அக் குளத்தின் நடுவே ஒரு தாமரை மலர் அடிக்கடி தோன்றுவதும் மறைவதுமாக இருந்தது. ஏனைய மலர்களைக் கார் நிற வண்டுகள் சுற்றிச் சுற்றி ரீங்காரம் செய்ய, இந்த மலரிலே இரு நீலக் கருவண்டுகள் ஒன்றிக்கிடந்தன. கண்ணிமைக்காது அக் காட்சியைப் பார்த்தபடியே நின்ற குப்பனுக்கு அடிக்கடி தோன்றி மறையும் அந்த தாமரை மலர் உண்மை மலரல்ல. ஒரு கன்னியின் முகம் என்ற உண்மையை அறிய அதிக நேரம் பிடிக்கவில்லை அவளது தாய்மை படைத்த உடம்பினையும், பசுந் தோகை நிகர்த்த நடையினையும் கண்ட குப்பன் தன் நிலைமறந்து அச்சடித்த பதுமையாகிவிட்டான்.

நீராடி முடிந்த அந் நங்கை வெளியே வந்தாள். முகிலைக் கிழித்து வெளிவந்த மதியைக் கண்ட குப்பன் தன்னை மறந்தான்.

"சகலமும் நீயடி
மாதரசி—என்
சாக்காட்டை நீக்கிட
வேண்டும்" என இரந்தான்.

இருவர் கண்களும் கலந்துரையாடின.

"கன்னியனுப்பும் புதுப்
பார்வை—அவன்
கட்டுடல் மீதிலும்
தோளினிலும்—சென்று
மின்னலின மீண்டது!
கட்டழகன்—தந்த
விண்ணப்பம் ஒப்பினள்—
புன்னகையால்!

பேசாத பேச்சு அவள் கருத்தை வெளிப்படுத்தியது. கைகோர்த்தபடியே அருகிருந்த மாந்தோப்பை அடைந்தனர். குப்பனின் உணர்ச்சி மிக்க காதல் பேச்சு அக் கன்னிக்கு மகிழ்ச்சிக்குப் பதில் துயரத்தையே கொடுத்தது. அதற்குரிய காரணத்தைத் தான் கண்ணீரும் கம்பலையுமாகக் கூறுகின்றாள்.

"சின்ன வயதில்
என்றனையே—பெருஞ்
சீமான் மணந்தனன்;
செத்துவிட்டான்!—எனின்
அன்னது நான் செய்த
குற்றமன்று—நான்
அமங்கலை..............."

"நான் அமங்கலை" அவள் அவ்வார்த்தையை முடிக்கவில்லை. குப்பன் தலையை ஆயிரம் சம்மட்டிகள் தாக்கியதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. தன்னை மறந்து மாவிலை மெத்தையில் சாய்ந்துவிட்டான். அப்பொழுது அவன் உள்ளக் கடலில் எழுந்த உணர்ச்சி அலைகள் அப்பப்பா! கூறவே முடியாது.

"...............கண்ணற்ற
மூட உறவினரும்
வீதியிற் பற்பல
வீணர்களும் வேறு
விதியற்ற சிற்சில
பண்டிதரும்—வந்து
சாதியிலுன்னை விலக்கிடு
வோம்—உன்
தந்தையின் சொத்தையும்
நீ இழப்பாய்!—நம்
ஆதி வழக்கத்தை
மீறுகின்றாய்!—தாலி
அறுந்தவளை மணம்
ஒப்புகின்றாய்!—நல்ல
கோதை ஒருத்தியை
யாம் பார்த்து—மணம்
கூட்டி வைப்போம்
எனச் சபத மிட்டார்"

இச் சந்தர்ப்பத்தில்தான் நிலையற்ற இளைஞர்களின் உள்ளக் கொள்கை நன்கு புலப்படும். இவற்றைக் கண்டு குப்பன் கலங்கிவிடவில்லை. திட உறுதியுடன், கண்ணீர் ததும்பத் தன் முன் கன்னியை நோக்கினான். அவன் கண்களில் கடமை ஒளி வீசியது. குரலிலே உறுதி தொனித்தது.

"ஏடி வடிவத்தின்
அதிகமே! மூடர்
எதிர்ப்பில் வெளிப்படும்
நமது சக்தி!
காதல் அடைதல்
உயிரியற்கை—அது
கட்டில் அகப்படும்
தன்மையதோ?
நீ தடுமாற்றம்
அகற்றிவிடும்!—கை
நீட்டடி! சத்தியம்!
நான் மணப்பேன்

அவன் கூறி முடிக்கவில்லை. ஈருடலும் ஓருருவமாயினர். அப்புறம் கொள்ளை! கொள்ளை!! கொள்ளை!!!—இன்பம் மாந்தோப்பில்! இதுதான் பாரதிதாசனது கவிதைக் கதையின் கடைசி அடி.

## எல்லாம் பொய்தானோ!

கனவு வரும், நீ வருவாய்;
கை நிறையப் பூ தருவாய்!
நினைவு தரும் சுந்தரியே—
தேன் பிடித்த முல்லையதின்
நினைவு வரும்; நெருங்கிவர
நெளிந்தோடிப் போயினையே!
"இணைபிரியேன்" என்றுரைத்த
இரு சொல்லும் பொய்தானோ?
2
"உன்னைப் பிரிந்து விடின்
உயிர் தரியேன், உடல்கட்டை—
தன்னைத் தரவுந்
தயங்கேன், இத்தரணியில்
என்னைப் பிரியாது
ஏற்றருளவாய்" என்றொருநாள்
சன்னக் குரலிசைத்த
சாறெல்லாம் பொய்தானோ
3
பச்சைக்கிளியே!
'பழக்குலை நான், ஏதேனும்
இச்சை யிருந்தால்
இதமீட்டவா" வென்று
அச்சத்தை விட்டு
அழைத்தாய்; யான் ஓடிவர
நச்சுத் தலையரவாய்
நழுவியதும் பொய்தானோ?
4
மெல்லென்ற பஞ்சணையில்
மேனிகிடந்துருளச்
சில்லென்று காற்றடித்துச்
சேலை இடம்பெயரக்
கொல்லென்று நான் நகைத்துக்
கூவழைய மூடியதும்
"நிலவா நீபோ" வெனக்கதை
[illegible]

—வி. கி. இராசதுரை


அமிர்தா வாய்வுசூரணம்

இது சகலவிதமான வாய்வு தொந்தரவு, வயிற்றுவலி, புளிச்சஏப்பம், வாந்தி, அஜீரணம், இடுப்புவலி, முதுகுவலி, பசியின்மை, சூதகவயிற்றுவலி, இருமல், இளைப்பு, ஈஸ்னோ முதலிய வியாதிகளுக்கு நிச்சயநிவாரணி. கர்ப்பஸ்திரீகளுக்கோர் நல்ல மருந்து.
டின் விலை ரூ. 2-00. தபால் செலவு வேறு.

நேத்திரா அமிர்த தைலம்

இதை நாடோறும் பாவித்துவந்தால் பீனிஸம், ஒருதலைவலி, பித்தக் கிறுகிறுப்பு, தூக்கமின்மை, பாலைக்கண், கண்கூச்சல், கண்ணெரிச்சல், நீர்வடிதல் முதலிய வியாதிகள் சுகமாகும். அளவுக்கு மிஞ்சிய உஷ்ணத்தை தணிக்கும். கண்களுக்குப் பிரகாசத்தையும், கூந்தலை அழகாகவும், கறுப்பாகவும், வளரச் செய்யும்.
12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 4-50.
6 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 2-50.
தபால் செலவு வேறு.

T. K. (டி. கே.) "மார்க்" இருக்கிறதா என்பதைப் பார்த்து வாங்குங்கள்

செல்லராஜா அன் கோ
பாக்கியலெக்ஷிமி வைத்தியசாலை
170, செட்டியார் தெரு, கொழும்பு.



கன்வஸர்கள்

உள்ளூருக்கும் வெளியூருக்கும் கன்வஸர்கள் எடுக்கப்பட்டாயிற்று. விண்ணப்பம் அனுப்பியவர்களுக்கு நன்றி. தனிப்பட்டமுறையில் எல்லாருக்கும் பதில் எழுதுவது சாத்தியமில்லை மேலும் கன்வஸர்கள் வேண்டும்போது கடிதமூலம் அறிவிப்போம்.
மானேஜர்,
சுதந்திரன்.




இரும்பு பணப் பெட்டிகள்

லண்டன் நகர ஜோன்டான லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை

1795-ம் ஆண்டில் ஸ்தாபகம் - மிகப் பழைய ஸ்தாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திர சிற்பிகள்

நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது அதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப்படவில்லை.



கள்வர்களைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வர்களால் திறக்கப்படவில்லை.

டொட்வெல் & கம்பெனி லிமிட்டெட்
ஆபீஸ் பொருட்கள் விற்பனைப் பகுதி.
18/20, குவீன்ஸ் வீதி, கோட்டை, கொழும்பு
போன்: 2301.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர் ஒலிவரின் அன்னக்காவடி

மின்னேரியாத் திட்டங்கள்கல்லோயா திட்டங்கள் 15 வருடங்களாக கோடிக் கணக்கில் வரிப் பணத்தை விழுங்கிய இன்னும் எத்தனையோ திட்டங்கள். இவைகள் சாதாரண திட்டங்களா என்ன? ஆனல் ஆட்சியாளரின் புண்ணியத்தில் அரிசித் தட்டுப்பாட்டுக்கு மட்டும் குறைவேயில்லை. ஏதோ அத் திட்டங்களைப் பூதக் கண்ணுடியின்மூலம் காட்டி தேர்தலில் வாக்குகளைப் பிடுங்குவதற்காவது அவைகள் உதவியாக இருந்தனவே அதுவரையு. என். பிக்கு க்ஷேமம்தான்.

முதலில் "தேசத் தந்தை" விவசாய மந்திரியாக இருந்து பிரதமரானர், பிறகு "தேசத் தனயன்" விவசாய மந்திரியாயிருந்து பிரதமரானர். இப்பொழுது சேர் ஒலிவர் விவசாய மந்திரியாகி இருக்கிறர். அப்படியானல் அவர்தானே அடுத்த பிரதமர் என்று கேட்டு வைக்காதீர்கள். சேர் ஜோனின் மனக் கோட்டை தகர்ந்தாலொழிய அது எப்படி சாத்தியமாகும்?

சேர் ஒலிவர் அரிசி தேடி லண்டனுக்குப் பறந்து போயிருக்கிறர். சேர் பன்னீர்ச் செல்வம் பறந்ததைப் போலல்லாமல், சேர் ஒலிவர் லண்டனில் போய்க் குதித்து அரிசி தேடிக் கொண்டிருக்கிறர். அரிசி வேண்டுமென்ருல், ஏராளமாக அரிசி உற்பத்திச்செய்யும் பர்மா, தாய்லாந்து, சீனுபோன்ற நாடுகளுக்கல்லவா அவர் போக வேண்டும், ஒரு அரிசி "மரம்"கூட உற்பத்தியாகாத பிரிட்டனுக்கு ஏன் பறந்துபோனர் என்ற சந்தேகத்தைக் கிளப்பிவிடாதீர்கள். அதெல்லாம் "யு. என். பி. இரகசியங்கள்"




இலங்கையில் அரிசித் தட்டுப்பாடு-உணவுப்பொருட்கள் உபரியாக இல்லாவிட்டாலும் தட்டுப்பாடின்றியாவது இந்நாடு இருக்கக்கூடாதா? தேர்தல் முடிந்தவுடன் அரிசித் தட்டுப்பாடு திடீரென்று ஏற்பட்டது புரியாத புதிராகிவிட்டது. தேர்தலுக்குமுன்பே அரிசிக் கையிருப்பு கணிசமாக குறைந்திருந்தும் அதனை அப்பொழுது வெளியிடாமல் தேர்தல் முடிந்த பிறகு உண்மையை வெளியிட்டதுதான் அரிசிக்கு வந்த இத் திடீர் பஞ்சத்தின் காரணம் என்று கூறப்படுகிறது.

இரகசியமாவது புண்ணுக்காவது, அவர் இங்கிலாந்திலே ரேஸ் குதிரை வாங்கப் போயிருக்கிறர் என்கிறர் ஒரு சந்தேகப் பிராணி. பிரிட்டன் அமெரிக்காபோன்ற நாடுகளிலே குஷியாகச் சுற்றித் திரிவதிலே அவருக்கு அலாதியான ஒரு பிரியம். ஆகவே அவர் கேசரிமார்க்கமாக உல்லாசப் பிரயாணம் கிளம்பிவிட்டார் என்றெல்லாம் அவரைப்பற்றி அறிந்த "அறிஞர்" ஒருவர் அளக்காமல் கொட்டுகிறர்.

சேர் ஒலிவர் ஆகாய வெளியிலே உழுது சாகுபடி செய்கிறர் என்ற தலைப்புடன் அவரும் அவரது சகாக்களும் ஒரு மண்வெட்டியின் மீதமர்ந்து ஆகாயத்தில் பறப்பதைக் காட்டும் கிண்டல் சித்திரமொன்றை ஒரு தினசரிப் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது ஏதேது, கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகிவிட்டதே! அரிசி உற்பத்தியாகாத தேசத்திற்கு அவர் அரிசி தேடிப் போக, ஏகப்பட்ட வதந்திகள் நாட்டிலே நடமாட இடமேற்பட்டுவிட்டது.

யார் எதைச் சொன்னலும் ஒரே ஒரு உண்மைதான் உண்மையாகப்போகிறது. எதற்கெடுத்தாலும் ஆங்கிலோ-அமெரிக்க எஜமானர்களிடம் ஆலோசனை கேட்பது யு. என். பி. ஆட்சியாளரின் உடன்பிறந்த பழக்கம். அதற்கொப்ப அரிசித் தட்டுப்பாட்டைப் பற்றி ஆலோசனை கேட்க சேர் ஒலிவரும் எஜமானர்களிடம் காவடி தூக்கியிருக்கிறர். இதுதான் உண்மை.

பொதுத் தேர்தல் சமயத்தில் தங்களுக்குச் செய்த பேருதவிகளுக்காக அமெரிக்க அதிகாரவர்க்கத்திற்கு நன்றிகூற அவர் மறந்துவிட மாட்டாரென்று நம்பப்படுகிறது.

### பசுக்களுக்கு தனி ரேடியோ நிகழ்ச்சி

ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கற, பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக்கற என்பது தமிழ்நாட்டுப் பாட்டிமொழி சங்கீதத்தை ரசிப்பதில் மாடுகளுக்கு, சிறப்பாக கறவைப் பசுக்களுக்கு அலாதியான ஒரு ஆர்வம் உண்டென்று "மாடு" நிபுணர்கள் கூறுகிறர்கள்.

ரேடியோவைத் திறந்து வைத்துவிட்டு பால் கறந்தால், பசு சங்கீதத்தில் லயித்துப்போய் விடுவதால் அமைதியாக நிறையப் பால் கறக்க முடியுமாம் கன்றுக்காக பாலை ஒளித்து வைக்க வேண்டுமே என்ற எண்ணம்கூட பசுவின் மனதில் ஏற்படுவதற்கு இடமில்லாதுபோய்விடுமாம். 'சண்டிப்' பசுகூட சங்கீதத்தில

(13-ம் பக்கம் பார்க்க)


# முள்ளுக்கம்பி

விற்பனவுக்கு இருக்கின்றது.

450 யார் 12½ கேச் அந்தர் ரூபா 54-00


உங்கள் தேவைகட்கு எங்களிடம் வாருங்கள்.

சாமுவேல் சன்ஸ் அன் கம்பெனி லிமிட்டெட்.

371, பழைய சோனகத் தெரு, கொழும்பு.

டெலிபோன்: 2341 தபால்பெட்டி; நிர் 46.



## வழி மறைத்திருக்குதே மலைபோலே......



இவதரிசனம் காணமுடியாமல் அன்று நந்தன் தவித்தான். தீண்டாமை என்ற கண்மூடி வழக்கம் அந்தப் பரமபக்தனை ஆலயப் பிரவேசம் செய்ய முடியாமல் அன்று தடுத்தது, நமது நாட்டு அரசியலிலும் இலங்கை வாழ் இந்தியர்கள் தீண்டாதார்களாக நடத்தப்படுவது பெரும் அக்கிரமம். பாராளுமன்றத்துள் ... பிரவேசித்து ஸ்பீக்கர் தரிசனம் காணமுடியாமல் ... இதோ ஒரு "பூதம சத்து" மலைபோல் மறைப்பதைப் படத்தில் காண்க


# லைப்காட

பழக்கம் உங்கள் குடும்பங்களை பாதுகாக்கும்




லைப் காட் என்பது நோய்க் கிருமிகளைக் கொல்லும் ஓர் விஞ்ஞான ஆயுதம். எப்பொழுதும் வீட்டில் ஒரு போத்தல் வைத்திருந்து கீழ்க் காணப்படும் முக்கிய விதிகளின்படி உபயோகியுங்கள்.



1. கொள்ளை நோய் காலங்களில் லைபகாட் கலந்த நீரால அடிக்கடி கொப்பளியுங்கள்.
2. கைகள் மூலம் நோய் தொற்ற விடாமல் லைபகாடினுல் கைகளைக் கழுவுங்கள்.



3. வலுக்கடிபட்ட பாகத்தில லைபகாடினுல் ஒற்றி வேதனையையும் வீக்கத்தையும் குறையுங்கள்.
4. குழந்தைகளை மேல படும வெட்டுக்கள உரை காயங்களை விஷக் கிருமிகள் தாக்கவிடாது உடனே லைபகாட் இடவுங்கள்.
5. உங்கள் மனைவியின் கர்ப்பகாலத்தில் பாவிப்பதற்கு லைப்காட வைத்திருங்கள்.

லைபகாட் எனப்படும் உன்னத புரை சபகார, கிருமி நாசனி உங்கள் "ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத ஓர் நிவாரணி"

இலங்கை ஏஜண்டுகள்

ஜே. எச். வவஷியா அன் கம்பெனி (ஸிலோன்) லிமிடெட்

யோர்க் வீதி, கொழும்பு,

J. H. Vavasseur & Co. (Ceylon) Ltd.

6 அவுன்ஸ் போத்தல் விலை 1-50

12 அவுன்ஸ் போத்தல் ஒன்று விலை 2-75


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரித் தேர்தல் மனு

## செல்லுமா செல்லாதா?

### சுப்ரீம் கோர்ட் தீர்மானிக்க வேண்டிய விஷயம் அது

### ஆனல் விசாரணைக்கு முன்பே வெற்றிக் கொண்டாட்டம்

சாவகச்சேரித் தொகுதி பாராளுமன்றப் பிரதிநிதி திரு குமாரஸ்வாமி சாவகச்சேரிக்கு ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். மீஸாலை ரயில்வே ஸ்டேஷனில் கூடியிருந்த சிலர் "வெற்றிக்கொண்டாட்டத்தில்" கலந்துகொள்ள அவரை அங்கு இறங்கும்படி கேட்டுக்கொண்டனர் விஷயமென்ன என்பதை விசாரித்தறிந்து கொண்ட திரு குமாரஸ்வாமி இக்கேலிக்கூத்தில் கலந்துகொள்ள மறுத்ததுமின்றி தனது சகாக்களுக்கு முட்டாள்பட்டமும் கட்டிவிட்டு அடுத்துள்ள சாவகச்சேரி ஸ்டேஷனில்போய் இறங்கிவிட்டார்.

சாவகச்சேரித் தேர்தலை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் தேர்தல் மனு குறிப்பிட்ட தினத்திற்கு ஒரு நாள் பிந்தி தாக்கல் செய்யப்பட்டதால், அம்மனுவின்மீது விசாரணை நடைபெற முடியாது என்று ஜூன் 27ந் தேதி "டைம்ஸ்" பத்திரிகையில் வெளியான ஒரு செய்திதான்மேற்கூறிய 'வெற்றி'க் கொண்டாட்டத்திற்குக் காரணம் ஆனல் இச்செய்தி வெறும் 'கப்ஸா" என்று தெரிந்து கொண்ட திரு குமாரஸ்வாமி இவ்வெற்றி விழாவில் பங்கெடுத்து அசட்டுப் பட்டம் கட்டிக் கொள்ளாமல் சிறிது சாதுரியத்துடன் தப்பிவிட்டார்.

கடந்த பொதுத் தேர்தல் சம்பந்தமாக 20 தேர்தல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. பிரதம மந்திரிக்கு எதிரான மனுவின்மீது சட்டப்படி மனுதார் ஜாமீன்கட்டத் தவறிவிட்டார். தேர்தல் மனுக்களைப்பற்றிய சட்டம் கூறுவதாவது:—

"மனுதாரால் ஜாமீன் தொகை கட்டப்படாவிட்டால், அந்த மனுவின்மீது மேற்கொண்டு விசாரணை நடைபெறாது மனுவை நிராகரிக்குமாறு எதிர் மனுதார் நீதிபதியிடம் கேட்டுக்கொள்ளலாம் அவர் தனது வழக்குச் செலவுகளையும் கோரலாம்"

எஞ்சிய 19 மனுக்களின் மீது ஜாமீன் தொகை கட்டப்பட்டு விட்டதென்றும், மனுக்களைப்பற்றி நோட்டீஸ் சாதரா செய்யப்பட்டு விட்டதென்றும் தெரிகிறது.

தேர்தல் மனு தாக்கல் செய்யப்பட வேண்டிய கால வரம்பைப்பற்றி பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 83வது விதி கூறுவதாவது;—

'தேர்தல் முடிவு அரசாங்க கெஜட்டில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 21 நாட்களுக்குள் ஒவ்வொரு தேர்தல் மனுவும் தாக்கல் செய்யப்படவேண்டும்"

#### கோர்ட்டுக்குதான் அதிகாரம்

சாவகச்சேரித் தேர்தல் முடிவு மே 31ந் தேதி அரசாங்க கெஜட்டில் பிரசுரமாயிற்று. மே மாதம் 31 தேதி என்ற கெஜட்டின் தேதியும் 21 தினங்களில் அடங்கியதாக கணக்கெடுக்கப் படாவிட்டால், இம்மனு சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள் தாக்கல் செய்யப்பட்டதாகும் ஆகவே அது முறைப்படி விசாரணை செய்யப்படும். ஆனல் மே 31ந் தேதி, 21 தினங்களில் அடங்கினதாகக் கருதப்பட்டால், ஒரு நாள் தாமதமாகி மனு தாக்கல் செய்யப்பட்டதாகிவிடும். அப்படியானல் அந்த மனு விசாரணை செய்யப்படமாட்டாது இரு தரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களையும் கேட்டு, பிரஸ்தாப மனு சரியான காலத்தில் தாக்கல் செய்யப்பட்டதா, இல்லையா என்பதை சுப்ரீம் கோர்ட்டார் நிர்ணயிக்க வேண்டிய விஷயமாகும் கோர்டடின் முடிவைப் பற்றி ஒரு பத்திரிகை ஜோஷியம் கூறுவது சாத்தியமல்ல இத்தகைய முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றி சுப்ரீம் கோர்ட்டின் முடிவை முன்கூட்டியே தெரிவிக்க ஒரு பத்திரிகை முயல்வது சரிதானு என்பது சந்தேகமே இந்த நிலைமையில் "டைம்ஸ்" பத்திரிகையில் பிரசுரமான அச்செய்தி தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்துகிறது.

### தமிழ் மறுமலர்ச்சி மன்றம்

பண்டாரவளை தமிழ் மறுமலர்ச்சி மன்றத்தின் மூன்ருவது பொதுக்கூட்டம் கடந்த 28-6-52ல் சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் திரு ஆர் பி. சுவாமி தலைமையில் நடைபெற்றது.

திரு ரெ இராமையா "அரசியலும் மாணவரும்" என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்

ஆசிரியர் எஸ். கே. நாகலிங்கம், திருவாளர்கள் க. கணேஷன், மு. அ. வேலு, ஏ சோமசுந்தரம், ஆர் தங்கவேல், எம பெரியசாமி, எஸ் சுப்பையா ஆகியோர் தமிழர்களின் பண்பாடு, நாகரீகம், தமிழ் மொழி முதலியவைகளைப் பற்றி சொற்பொழி வாற்றினர்கள்.

திரு ஆர் பி சுவாமி மன்றத்தலைவராகவும், திரு எஸ் கே நாகலிங்கம்உபதலைவராகவும் திருவாளர்கள் எம் சுப்ரமணியம், எஸ். எம் சணமுகம ஆகியோர் கூட்டுக் காரியதரிசிகளாகவும், திரு [illegible] தனதிகாரியா[illegible] கமிட்டி அங்கத்தினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.


"என்றும் உங்களுடையதே"
மிக மயிர்க்கூச்செறியும் புதிய
நறுமணம்...........
உண்மையான ஆனந்தமுள்ள ஒரு
[illegible] பூச்சு காத்து!
எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

மிக்காடோ அன் கோ,
டாம ஸ்டரீட், கொழும்பு.
போன்: 3242



"சந்திரா போட்டோ"

★ பழைய படங்களைத் திருத்தியமைத்தல்.
★ வெளியில் வந்து படம் எடுத்தல்.
★ அவசர பாஸ்போட் படங்கள் பிடித்தல்
★ ஒரே தினத்தில் ரோல பிலிம் அச்சடித்தல்.
★ தந்திரக் காட்சிகளுடன் படம் பிடித்தல்.
★ வாழ்த்துக் கார்டுகளில் உங்கள் படம் பதிப்பித்தல்.
★ வெளியூர் ஓர்டர்கள் உடனுக்குடன் அனுப்பி வைத்தல்

வெளியூர் நண்பர்கள் தங்களுக்கு வேண்டிய ரோல் பிலிம்களை கடித மூலம் தெரிவித்தால் உடனே V P P. மூலம் பெற்றுக்கொள்ளலாம்

"சந்திரா போட்டோ"
கிவட் (GEVART) விநியோகஸ்தர்கள்
68, பூந்தோட்ட ரோடு, கொழும்பு.
போன: 5737.



4 தலைமுறை பரமபரை வைத்தியமும் 40 வருட அனுபவமும் வாய்ந்த

டாக்டர் A. S. டானியல விஜயம்

பதுளை, பண்டாரவளை, ஹட்டன் வாசிகளுக்கு ஓர் அரிய தருணம்.



10, 11, 12ந்திகதிகளில் பதுளை ஜெமினி ஹோட்டல்.

13. 14ந் திகதிகளில் பண்டாரவளை சிங்கிரி ஹோட்டல்.

15, 16, 17ந் திகதிகளில் ஹட்டன் கள்ரே ஹோட்டல்.

மேற்கண்ட திகதிகளில் மேற்கண்ட இடங்களில் தங்குவார்.

உங்கள் வியாதிகள் எதுவானலும் நேரில் தெரிந்து மருந்து பெற்று சுகமடைய அரும் தருணத்தை தவறவிடாதீர்கள்.

A. S. டானியல் அவர்கள் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக வைத்தியம் செய்து அனுபவமுடையவர்கள். நான்கு தலைமுறையாக வைத்தியமேசெய்துவரும் இவர்களின் பரமபரை வைத்தியத்தைப்பற்றி அதிகமாக எழுதவேண்டியதில்லை.

எவ்விதமான வியாதியஸ்தர்களும ஆலோசனை பெறலாம், வியாதியை பரீட்சித்து தெரிந்தபின் உத்தரவாதமாக சிகிச்சை அளிப்பார். மலையாள அனுபவ நுட்ப முறைப்படி ஔஷதம் அமைத்துக் கொடுக்கப்படும.

ஆயுர்வேத டாக்டர் A. S. டானியல்

மலையாள மெடிகல் ஹால்
179, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பொழுது புலர்ந்தது

பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால் என்று கவிஞன் சுகவெறியில் பாடியிருக்கிறான். பகல் முழுவதும் இன்பத்தில் திளைப்பவர்களுக்கு இரவு ஏன் வருகிறது என்று தோன்றும். பாட்டாளிக்கு அவ்விதமன்று. பகல் முழுவதும் அவன் முதலாளியின் அடிமையாக இருந்து அல்லல்படுகிறான். அவனுக்கு இரவுதான் இன்பம் தருகிறது தான் செய்த பாவத்தின் பயனாகவே பொழுது புலர்கிறது என்கிறான் அவன்.

அடைமழையின் போது குஞ்சுகளைத் தனது இறக்கைகளால் போர்த்துக் கொண்டு கூட்டில் ஒண்டிக்கொள்ளும் தாய்க்குருவியைப்போல பாட்டாளி இரவு வேளையில் தானே தனது குடும்பத்துடன் குடிசையில் குந்திக்கொள்ள முடிகிறது. பகலெல்லாம் உடலை வருத்தி உழைத்த அவன் அலுப்புத் தீர உறங்குவதற்கு இரவு ஒன்றுதானே உண்டு. அந்த உறக்கம்தான் அவனுக்கு சுவர்க்கானுபோகம். தனது கஷ்டங்களையும் குடும்பப் பொறுப்பையும் வேலையையும், முதலாளியின் கெடுபிடியையும் மறந்து நிம்மதியாக இருப்பதற்கு தூக்கமல்லவா அவனுக்கு துணை புரிகிறது. அவனுக்கு சினிமாவும், டிராமாவும் பார்க்க அவகாசமுண்டா? அல்லது அந்தஸ்துதான் உண்டா? உணவுக் கவலையும், வறுமைப் பிணியுமின்றி இன்பக் கனவுகள் கண்டு நிம்மதியாகத் துயிலும் இரவுதான் இந்த உலகில் மரணத்துக்கடுத்தபடியாக அவனுக்கு ஆறுதலையும் சந்தோஷத்தையும் அளிக்கவல்லது. கனவுலகில்தான் அவன் இம்மை இன்பங்களை அனுபவிக்கிறான். அவன் வானத்து யோகினிகளுடன் கைகோத்துலவுவதும் வளையணிந்த பொற்கரங்கள் இலைமூதூட்ட உண்டு களிப்பதும், கட்டிளம் பெண்களின் தண்டமிழ்க் கீதம் கேட்டு மகிழ்வதும், பொன்னும் மணியும் மின்னும் பட்டும் அணிந்து சுகிப்பதும் அந்தக் கனவு லோகத்தில்தான்.

மாயாண்டியின் தப்பொலி மலைகளில் எதிரொலித்த மல்லிகைத்தோட்டமெங்கும் "தாண்ட நகின; நகின நகின" என்ற சப்தம் வியாபிக்கின்றது. பொழுது புலர்ந்துவிட்டது. ஆனால் கோழி கூவவுமில்லை; காகம் கரையவுமில்லை; குயில் பாடவுமில்லை; புள்ளினம் ஆர்க்கவுமில்லை. அந்தக் கடுங் குளிரில் மாயாண்டியைப்போல அவை அதிகாலையில் எழுந்திருந்து குரல் வைக்கவேண்டிய அவசியமென்ன? மாயாண்டி அப்படியிருக்க முடியுமா? அவன் பிறவி எடுத்ததே அதிகாலையில் எழுந்திருந்து தப்படித்து மல்லிகைத் தோட்டத் தொழிலாளிகளுக்கு திருப்பள்ளியெழுச்சி பாடத்தானே அந்தக் கடமையை அவன் உதாசீனம் செய்ய முடியுமா? குளிருக்கும் பனிக்கும் பயந்து குடிசையில் குந்திக்கொண்டால் அவனுக்கு சோறு போடுவது யார்? பிள்ளைகுட்டிகளுக்கு அக்கிப்படைப்பது தான் எப்படி?

அவனுடைய முரசொலி தொடர்ந்து கேட்கின்றது. மல்லிகைத் தோட்டத்திலேயுள்ள லயம் எனப்படும் மனிதப் பொந்துகளில் கறுத்தக் கம்பளிகளை இழுத்துப் போர்த்துக்கொண்டு நிம்மதியாகத் தூங்கும் தொழிலாளிகளின் இன்பக் கனவு கலைகிறது கனவைக் கூட பூரணமாகக் கண்டு அனுபவிக்க முடியவில்லையே என்று அலுத்துக் கொண்டு எழுந்திருக்கின்றனர்.

காலை ஆறு மணிக்கெல்லாம் ஆண் பெண் தொழிலாளிகள் "பிரட்டு"க்குப் போய் பேர் கொடுத்துவிட்டுத் தத்தம் வேலைத்தளத்துக்குப் போய்விடவேண்டும். பெண்கள் கூடையும் தலையுமாக கொழுந்தெடுக்க மலைக்குப் போய்விடுவார்கள். அவர்களுடைய இரண்டு கைகளும் இருதளிரும் அரும்புமாகவுள்ள கொழுந்துகளைக் கொய்து முதுகில் தொங்கிக்கொண்டிருக்கும் கூடைக்குள் எறிந்து கொண்டிருக்கும். அதோ தூரத்தில் அந்த மலையில் பச்சைப்பசேலென்று வளர்ந்திருக்கும் தேயிலைச் செடிகளுக்கிடையே கறுப்பும், சிகப்பும், பச்சையுமாகத் தெரியும் புள்ளிகள் கொழுந்தெடுக்கும் பெண்களே. ஆண்கள் இன்னும் கொஞ்சம் கடினமான வேலைகளைச் செய்வதற்கு மண்வெட்டியும், முள்ளும், கத்தியும் கையுமாகச் செல்வர் தேயிலைச் செடிகளை கப்பாத்துப் பண்ணுதல், தேயிலைத் தூருக்கு உரம் போடுதல், வெள்ளம் வடிவதற்கு கான் வெட்டுதல், புல் வெட்டுதல் ஆகிய வேலைகளை இவர்கள் செய்வார்கள்.

கந்தோர்ச் சிப்பந்திகளும் கடமை தவறாது எட்டு மணிக்கெல்லாம் கந்தோரில் ஆஜராகிவிடுவார்கள். வேலையிருந்தாலும் இல்லாவிட்டாலும் வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் எட்டு மணிக்கு எல்லாரும் கந்தோருக்கு வந்துவிட வேண்டும் முதலாளி வர்க்கத்தின் எழுச்சாதிகாரச் சட்டம் அது சரியான டயத்துக்கு வந்ததையும் வராததையும் கேட்பதற்கு அங்கு யாருமில்லை. அப்படியிருந்தும் அடிமைத்தனத்தில் ஊறிப்போனவர்கள் எட்டுமணி என்றதும் கந்தோரில் வந்து குந்திக் கொள்வார்கள்.

டக்ளஸ் துரைக்கு இந்த மணிக்கணக்கெல்லாம் கிடையாது அவர் ஆளும் வர்க்கத்தின வாரிசு. முத லாளித்தவத்தின் பிரதிநிதி. அவருக்கு அண்டவன்தானும் சட்டமேயிட முடியுமா? விருப்பமான படி விலாசம்; போகலாம். எனினும் வாங்கும் சம்பளத்துக்கு உழைக்கவேண்டுமென்ற கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டு பத்து மணியாகியும் குளிரும் அடங்கி சூரிய வெப்பம் உண்டான பின்னர் வெளியே கிளம்பிவிடுவார். தோட்டத்துரைமார் செய்யும் வேலைதான் தெரியுமே நிர்வாகத்தை மேற்பார்வையிடுவதும் தோட்டத்தைக் கண்காணிப்பதும் கடிதங்கள் செக்குகளில் கையொப்பமிடுவதும்தான் அவர்களின் வேலைகள்.

பத்துமணிக்கு வந்தார் துரை. வாக்கிங் ஸ்டிக் சகிதம் ஸ்டோருக்குச் சென்று கொழுந்து அரைத்தல், சலித்தல், உலர்த்தல், பிடைத்தல், குச்சிபொறுக்குதல் போன்ற வேலைகளைப் பார்த்துவிட்டு டீ மேக்கரை அழைத்து வைத்து இரண்டு நிமிஷம் பேசிவிட்டுக் கந்தோருக்குச் சென்றார். அங்கு காஸியர் சமரவீரா கொண்டுவந்து நீட்டிய காகிதங்கள் செக்குகளில் கையொப்பம் போட்டுக் கொடுத்துவிட்டு தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார்.

காஸியர் சமரவீரா கந்தோருக்குப் போய்விட்டார். ஆனால் அவருடைய தர்மபத்தினி பிரேமாவதியோ பத்துமணியாகியும் பஞ்சணையைப் பிரிய மனமில்லாமல் புரண்டுகொண்டிருந்தாள். சமரவீரா பரம சாது பெற்றோர்கள் இங்கிலீஸ் பள்ளிக்கூடத்தில் நாலு வகுப்பு படிக்கவைத்ததால் ஸ்கூல் பைனல்பரீட்சையில் இரண்டு முறை பல்டியடித்துவிட்டு சர்க்கார் உத்தியோகத்துக்குப் பிராப்தமில்லையென்றெண்ணித் தோட்டக் காட்டு உத்தியோகத்தை தேடிக்கொண்டார்.

அந்தக் காலத்தில் தேயிலைத் தோட்ட உத்தியோகத்தர்களுக்கு கல்யாண மார்க்கெட்டில் கிராக்கியிருந்தது சர்க்கார் உத்தியோகத்தில் கிடைக்கும் சம்பளம் பட்டின வாசத்துக்குத்தான் சரியாகஇருக்கும். தோட்டக் காட்டிலோ வீட்டு வாடகை கிடையாது. வேண்டிய விறகு ஸ்டோரில் எடுத்துக் கொள்ளலாம் பட்டணத்தில்போல தினமொரு விருந்தாளிகள் வந்துகொண்டிருக்க மாட்டார்கள சினிமா தியேட்டர்களும் காப்பி ஹோட்டல்களும் இல்லாததால் தோட்டக்காடுகளில் வீருதாச் செலவும் குறைச்சல் இத்தியாதி காரணங்களால் பெண்ணைப் பெற்றவர்கள் தோட்டக் காட்டு உத்தியோகத்தர்களை இளப்பமாக நினைக்கவில்லை.

பிரேமா கண்டி நாட்டில் பரம்பரையாகவே செல்வாக்கான குடும்பத்தில் பிறந்தவள். நல்ல அழகி கண்டிப் பெண்டிர் பொதுவாக நல்ல அழகிகள். மலைகளில் நடமாடுவதால் போலும் நல்ல கட்டுமஸ்தான தேகமுள்ளவர்களாயிருப்பர். பிரேமா அந்த அழகிகளுக்குள் அழகியாக இருந்தாள் நன்கு பேசக் கூடிய அளவுக்கு ஆங்கிலம் கற்றிருந்தாள். அத்துடன் சங்கீதம், நாட்டியம், தையல் போன்ற பெண்களுக்குரிய கலைகளையும் பயின்றிருந்தாள் இத்தகைய ஒரு பெண் சமரவீராவின் மனைவியாக அமைந்தது விதியின் திருவிளையாட்டேயன்றி வேறல்ல. ஏனெனில் இத்தகைய ஒருத்தியை அடைவதற்கு சமரவீரா அருகதையற்றவன். அவள் மாட்டுள்ள சிறப்புகளை ரஸிக்கத் தெரியாத ஒருவனுக்கு அவள் வாழ்க்கைப் பட்டாள்.

இதற்காக சமரவீரா கவலைப்படவில்லை. பிரேமாவதி செய்யவேண்டியவற்றை சிறப்பாகச் செய்வதற்குத்தான் அங்கு வேலைக்காரி இருக்கிறாளே. காலையில் அவள் கொடுக்கும் காப்பி பலகாரத்தைச் சாப்பிட்டுவிட்டு அவன் கந்தோருக்குப் போய்விட்டான்.

பத்து மணியாகியும் நோனா படுக்கை அறையிலேயே இருந்தது ஆயாவுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணிற்று. எசமானி படுக்கையிலிருந்து எழவில்லையே என்று வேலைக்காரி பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் அவளுடைய வயிற்றுக்கு அந்தப் பொறுமை வேண்டுமே! ஆசா— பிரேமாவதியின வேலைக்காரி—பத்து மணி வரை பொறுத்துப் பார்த்தாள். எஜமானி எழுந்து வருவதாயில்லை. ஒரு கப் காப்பியை எடுத்துக் கொண்டு பிரேமாவதியின் படுக்கை அறைக்குச் சென்றாள அங்கு தூங்காமற் தூங்கிக் கொண்டிருந்த பிரேமாவதி காப்பியைக் கண்டதும் அதை வாங்கி மடமடவென்று குடித்துவிட்டு சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்தாள். தனது யுக்தி பலித்துவிட்டதென்ற மகிழ்ச்சியுடன் ஆசா குசினிக்குச் சென்றாள்.

பிரேமாவதி அவசர அவசரமாக மூலையிலிருந்த பேஸின் ஜலத்தில் முகத்தையலம்பிக் கொண்டாள. கொடியிலிருந்த துவாலையை எடுத்து ஈரத்தை துடைத்துக் கொண்டு உள் சட்டையைச் சுழற்றி அரையில் சுருக்கி இறுக்கிவிட்டாள். டால்கம் பவுடர் டின்னை எடுத்துத் திறந்து முகத்திலும் கழுத்திலும் கொஞ்சம் பவுடரைத் தூவித் தடவிவிட்டாள் பின்னர் கட்டிலில் தலைமாட்டில கழற்றி வீசியிருந்த நவீன மார்புக் கச்சத்தை வரிந்து கட்டிக் கொண்டு சட்டையை மேலுக்கிழுத்துக் கைகளை மாட்டிக் கொண்டு அதற்குமேல் ஒரு பல்வாண வாயில் ரவிக்கையை அணிந்தாள. நீலக்கலர் ஜார்ஜ்—



பிரேமா பல்லிருப்பதாவது தடவையாக நிலைக் கண்ணாடிமுன் நின்று தனது அலங்காரத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜக்காத்தும் சதக்காவும்

"ஜக்காத்" என்பது ஒரு வகையான கட்டாய ஏழை வரி. குறிப்பிட்ட சில சொத்துக்களின் மீதே இவ் வரி வசூலிக்கப்படும் இதனைச் செலுத்த வேண்டியவர்கள் வயதுவந்தவர்களாகவும், சுய-அறிவும் திறமையும் உடையவர்களாகவும் இருத்தல்வேண்டும். இதைப்பற்றி, நபி பெருமான் (ஸல்) அவர்கள், சில சட்டதிட்டங்களை வகுத்துள்ளார்கள். அவ்விதிகளையெல்லாம் நபிகள் நாயகத்துக்குப் பின் வந்தவர்கள் பின்பற்றி நடந்து வந்திருக்கின்றார்கள் ஏழை வரி விதிக்கப்பட்ட பொருள்களாவன:

(1) நிலத்திலிருந்து விளையும் தானியங்கள், கனிகள், பேரீச்சம் பழங்கள், திராட்சைப் பழங்கள் முதலியன;

(2) ஒட்டகங்கள், ஆடு மாடுகள், மற்றும் வீட்டில் வளரும் நாற்கால் பிராணிகள்;

(3) பொன், வெள்ளி;

(4) வியாபாரப் பொருட்கள் ஆகிய இந் நால்வகை சொத்துக்களின்மீது "ஜக்காத்" என்னும் ஏழை வரி விதிக்கப்பட்டுவந்தது.

நிலத்தில் விளையும் பொருட்களின்மீது விதிக்கப்படும் "ஜக்காத்"தை ஒரு வகையான நிலவரி என்று கூறலாம். இது முஸ்லிம்களிடமிருந்து மட்டுமே வசூலிக்கப்பட்டு வந்தது. சுதந்திரப் பிரியர்களாயிருந்த அரபுகள், எந்த விதமான வரி செலுத்துவதையும் விரும்பவில்லை. அவ்விதம் செலுத்துவது அவமானமென்றும், அடிமைத்தனத்துக்கு அடையாளமென்றும் கருதினார்கள். எனவே, மகான் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டு மக்களின் தேசிய உணர்ச்சியைப் புண்படுத்தாத முறையில் அவர்களின் சுதந்திர புத்திக்கு ஏற்ற வகையில் ஏதாவது ஒரு வரியை வசூலிக்க விரும்பினார்கள். எனவேதான் அரபு நாட்டு மக்கள் மனமுவந்து அன்புடன் அந்த வரியைச் செலுத்தும் பொருட்டு, அதற்கு "ஜக்காத்" அல்லது 'ஏழைவரி' என்று பெயரிடப்பெற்றது. உண்மையில் ஒரு விதமான ஏழைவரி செலுத்துவதென்பது அரேபியாவில் சில பகுதிகளில் முற்காலத்திலேயே இருந்து வந்திருக்கிறது. "ஜக்காத்" என்பது யூதர்களின் தாய் மொழியிலிருந்து வந்தது. இதற்கு "பரிசுத்தம் செய்தல்" என்று அர்த்தம் யூதர்கள் தங்களின் செல்வத்திலிருந்து "ஜக்காத்"தைக் கொடுத்து விட்டால், அவர்களின் சொத்துக்கள் பரிசுத்தமாகிவிடுமென்று நம்பி வந்தார்கள்

"ஜக்காத்" (ஏழைவரி) விதிப்பதில் எல்லா சொத்துக்களும் நான்கு வகையாகப் பிரிக்கப்படுகின்றன: (1) நிலம் (அல்லது நிலத்தில் விளையும் பொருட்கள்), (2) பொன்னும் வெள்ளியும், (3) பிராணிகள், (4) வியாபாரப் பொருட்கள்.

நிலத்தில் விளையும் பொருட்களில், 10 அல்லது 5 சதவிகிதம் 'ஜக்காத்' விதிக்கப்பட்டது. அதாவது, மழை, அல்லது வாய்க்கால்களின் நீரைக் கொண்டு பாய்ச்சப்படும் நிலத்தின் விளைபொருட்களுக்கு 100க்கு 10 வீதமும் வாளியின் உதவியால் தண்ணீர் பாய்ச்சப்படும் நிலத்திற்கு 100க்கு 5 வீதமும் ஏழை வரி விதிக்கப்பட்டுவந்தது இந்த வரி, அறுவடை ஆனவுடனே செலுத்தப்பட வேண்டியதாகவும் இருந்தது அந்த விளைபொருட்கள், குர் ஆனில் சொல்லப்பட்டுள்ள ஒரு அளவிற்கு அதிகமாக இருந்தால்தான் அதற்கு இந்த வரி விதிக்கப்படும்.

பொன், வெள்ளி ஆகிய பொருட்களின்மீது 100க்கு 2½ வீதம் "ஜக்காத்" செலுத்தப்பட்டு வந்தது. இதில் ஒரு நிபந்தனையும் உண்டு அதாவது, குறைந்த பட்சம் 200 திர்ஹங்கள் (வெள்ளி நாணயம்) ஒரு முஸ்லிமின் சொந்த சொத்தாக 12 மாதகாலத்துக்கு அவரிடம் இடைவிடாமல் இருந்திருக்க வேண்டும். (இந்தியாவின் முகலாய பேரரசராயிருந்த அவுரங்கஜேப் (1707) அவர்கள், இதற்குச் சமமாக ரூபாய் 52-8-0 நிர்ணயித்திருந்தார்)

பிராணிகளைப் பொருத்தவரையில் 5 ஒட்டகங்கள், அல்லது 30 கால்நடைகள், அல்லது 4 வெள்ளாடுகளுக்குக் குறைவாக வைத்திருந்தவர்களிடம் வரி வசூலிக்கப்படவில்லை. 25 ஒட்டகங்கள்வரை வைத்திருப்பவர்கள் 4 வெள்ளாடுகளை ஜக்காத்தாகக் கொடுக்கவேண்டியிருந்தது. இந்த அளவிற்கு அதிகமாக வைத்திருப்பவர்கள் அதற்குத் தகுந்த அளவில் வரி விதிக்கப்பட்டுவந்தார்கள்.

வியாபாரப் பொருட்களின்மீது பொன், வெள்ளியைப்போல் இரண்டரை சத விகிதம் ஏழை வரி விதிக்கப்பட்டது.

முன்னே குறிப்பிட்டது போல் 'ஜக்காத்' என்பது முஸ்லிம்களின்மீது விதிக்கப்படும் கட்டாய வரி; ஆண்டவனால் நிர்ணயிக்கப்பட்டது மேலும் அது இஸ்லாத்தின முக்கியக் கடமைகளுள் ஒன்றாகவும், இருக்கிறது தொழுகைக்கு அடுத்தபடியில் அது வைக்கப்பட்டிருப்பதால், அதன் முக்கியத்தை நன்கு உணரலாம் இதைப்பற்றி குர்ஆன் அடிக்கடி மக்களுக்கு அறிவுறுத்திக்கொண்டிருக்கிறது.

"அக்கீமுஸ் ஸலாத்த, வஆத்துஸ்ஸக்காதத" (தொழுகையைக் கடைப்பிடியுங்கள். ஏழை வரியைச் செலுத்திவிடுங்கள்) என்று 82 தடவைகளுக்குக் குறையாமல் திருகுர்ஆனில் திரும்பத் திரும்ப வருவதிலிருந்து இதன் முக்கியத்தைத் தெரிந்துகொள்ளலாம் இந்த விஷயத்தில் [illegible] எவ்வித சலுகையும் காட்டப்படுவதில்லை; முதலாவது கலீபாவாகிய அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது கலீபா பதவியின் ஆரம்பகாலத்தில், இஸ்லாத்துக்கு மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருந்தபோது, இந்த ஜக்காத் விஷயத்தில் விட்டுக்கொடுக்க முடியாமல், ஒரு செல்வாக்குமிக்க கூட்டத்தின் ஆதரவை இழக்கவும் அவர்கள் அந்த வரி செலுத்த மறுத்ததன் விளைவாக அவர்களை எதிர்த்துப் போர்புரியவும் நேர்ந்துள்ளதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை அறியலாம்.

## "சதக்கா"

பணக்காரர்கள் தங்கள் விருப்பம்போல் ஆண்டவன் பாதையில் செய்யும் தர்மந்தான் "சதக்கா"வென்பது. சில சந்தர்ப்பங்களில் "ஜக்காத்"தும் "சதக்கா"வும் ஒரே பொருளில் கூறப்படுகின்றன. ஆனால் மேலே சொல்லப்பட்டதுதான் சரியான பொருள்.

'ஜக்காத்'தும் 'சதக்கா'வுமாகிய தர்மங்கள் அனைத்தும் அனாதைகள், வழிப்போக்கர்கள், குருடர்கள் ஆகியவர்களுக்காகவும், அடிமைகளை விடுவிப்பதற்காகவும் யுத்தக்கைதிகளின் மீட்சிக்காகவும் உபயோகிக்கப்பட்டுவந்தன வேலை செய்ய வியலாதவர்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களை அளிப்பதற்கும், ஏழை வரி வசூலிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் அது செலவிடப்பட்டுவந்தது கடன் பட்டவர்களின் கடன் தொகையைக் கொடுத்துத்தீர்ப்பதற்கும், புதிதாக இஸ்லாத்தில் சேர்ந்தவர்களுக்கும இதன் ஒரு பகுதி செலவிடப்பட்டது.

இஸ்லாத்தின் சமதர்மக் கொள்கைகளுக்கு இந்த முறை அஸ்திவாரமாக இருக்கிறதென்றும், இஸ்லாமிய மக்களின் உலக சகோதரத்துவத்தை இது தோற்றுவிக்கிறதென்றும், ஜெர்மன் பேராசிரியராகிய வானகிரேமர் கூறுகின்றார். மேலும் இந்த முறையானது உண்ண உணவு இல்லாமலும், உடுக்க உடையின்றியும், ஒருவர்கூட உலகில் இருக்கலாகாது என்று தெளிவாக எடுத்துக்கூறுகிறது "வைத்திய உதவியின்றியும், கல்வியில்லாமலும் எவரும் இருக்கக் கூடாது; நசுக்கப்பட்டவர்கள் கைதூக்கிவிடப்பட வேண்டும்; அடிமைகள் விடுவிக்கப்படவேண்டும்என்று இந்த இஸ்லாமிய சமதர்ம முறை சந்தேகத்துக்கிடமின்றி சொல்லுகிறது" என்று அந்த ஜெர்மானிய பேராசிரியர் புகழ்ந்து கூறுகின்றார். உண்மையில் இந்த முறையைக் கண்டுபிடித்த பெருமையெல்லாம் மகான் முஹம்மது நபி அவர்களை [illegible] யாக இருந்தார்கள். ஏழை மக்களின் துன்பங்களும், துயரங்களும் நபி பெருமானுக்கு நன்குதெரிந்தேயிருந்தன, இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்கு முதற்படியாக ஒரு ஒற்றுமையுள்ள சமுதாயத்தைச் சமைக்க வேண்டுமென்றும் அவர்கள தங்கள் வாழ்க்கை இலட்சியத்தைப் பூர்த்தி செய்யவேண்டு மென்றும் எண்ணி இத்தகைய தெளிவான திட்டங்களை நிர்மாணித்தார்கள், இதில் ஒரு வகையான சமதர்மம்இருக்கிறது. இது அபிவிருத்தியடைந்தால் மிக எளிதில் இந்த இஸ்லாமிய சமதர்மம் கம்யூனிஸத்தையே மிஞ்சிவிடக் கூடியதாக இருக்கும்.

இதைப்பற்றி கூறுங்கால், சமதர்மக் கொள்கைகளை முதலில் கண்டுபிடித்தவர் மார்க்ஸ் அல்லவென்றும், அக்கொள்கைகளை முதலில் செயலாற்றியவர்கள் லெனினும், அவருக்குப்பின் ஸ்டாலினும் அல்லவென்றும், அவைகளை முதலில் சொன்னவரும் செயலில் நடத்திக்காட்டியவரும் மகான் முஹம்மது நபி அவர்களே என்றும் கூறலாம். நபி பெருமான் அவர்களே இந்தக் கொள்கைகளைப் பிரசாரம் செய்தார்கள் வேற்றுமைக்கும்பகைமைக்கும் பெயர்வாய்ந்த அரபுநாட்டு மக்களிடையே அவைகளை நடத்திக் காட்டியவர் அந்த மகான் முஹம்மது நபியாவார்கள். (முஹம்மது நபியைப்பற்றி சர் வில்லியம்முய்ர் என்னும் சரித்திராசிரியர், "அந்தக் காலத்தில் வாழ்ந்த மேதைகளுக்கு மேதையாக விளங்கியவர்" என்று கூறுகிறார். ஆனால் அமீர் அலீ அவர்கள் மகான் முஹம்மது நபியை "எல்லா காலத்திலும் இணையற்றமேதை" என்று அர்த்தபுஷ்டியுடன் கூறுகிறார்.) இந்தக்கொள்கைகள் மகான் முஹம்மது நபி (ஸல்) அவர்களால் நடைமுறையில் பின்பற்றப்பட்டும் நன்கு வளர்க்கப்பட்டும் கலீபா உமரின் காலத்தில் ஒரு பெரிய சாம்ராஜ்யமாகப் பூரண வெற்றியடைந்துவிட்டது, இதனை உமர் அவர்கள் ஒரு கொள்கையாகவும், சட்டமாகவும் இயற்றினார் என்று வான்கிரேமர் கூறுகின்றார். இந்தக் கொள்கைகளிலே இஸ்லாத்தின் முன்னேற்றம் இருப்பதைக் கண்ட எம்பிரான் முஹம்மது(ஸல்) அவர்களின் கனவு எப்படிப் பூரணமாக வெற்றி பெற்றது என்பதற்குப் பிற்கால சரித்திரம் சாட்சியங் கூறிக்கொண்டிருக்கிறது.

(ஷரீப் அல் முஜஹ்ஹித்
"இஸ்லாமிக் ரிவ்யூ")

**ஏன் ? எங்கே ?**
**இன்ஷியூர் செய்ய வேண்டும் ?**

மேல்நாட்டில் இன்ஷியூர்
செய்யாதவர்கள் 100-க்கு 3 பேர்

நம் நாட்டில் இன்ஷியூர்
செய்தவர்கள் 100-க்கு 3 பேர்

அவசியம் ஒவ்வொருவரும் தங்கள்
ஆயுளை இன்ஷியூர் செய்யவேண்டும்

விபரங்கட்கு:

**பாரதமாதா பிராவிடண்ட்**
**அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**
117-119, செட்டியார்தெரு, கொழும்பு-11.

**காச வியாதியால் கஷ்டப்படும்**
**சகோதர சகோதரிகளே**
**தங்கள் வியாதி திரும்பி வராதிருக்க**
**ஹோமியோபதி சிகிச்சை முறை ஒன்றே**
**உங்கள் வியாதியை வேருடன்**
**களைந்தெறியும்**

மந்தாரம் போட்டவுடன் ஏற்படும் காசம், வெயில் காலத்தில் ஏற்படும் காசம், உஷ்ணத்தினால் ஏற்படும் காசம், சுவாச கோசக் குழாய்களில் ஏற்படும் காசம் ஜலதோஷம் ஏற்பட்டவுடன் ஏற்படும் காசம், வாயு பதாந்தரவினால் எற்படும் காசம், புஷ்பங்கள், மிருகங்களின் வாசனை (நாய், குதிரை) பட்டவுடன் ஏற்படும் காசம் ஆகிய எந்த ரகத்தைச் சேர்ந்த காச வியாதியும் வேருடன் களையும். இரவு 12 மணிக்கும் 3 மணிக்கும் மாலை 6 மணிக்கும் 9 மணிக்கும் பகல்களிலும் ஏற்படும் காசமும் (திடீரென்று தோன்றி மூச்சுத் திணறுதல் உண்டாகி தூங்கிக்கொண்டிருப்பவர் எழுந்து முன்புறமாக வளைந்து உட்கார்ந்து கொள்ளுவார்கள். இது முக்கிய குறி) வியர்வை பொழியும், சரீரம் சில்லிட்டுப் போகும். வியாதியஸ்தர் வியாதிகளை விபரமாக எழுதவேண்டும்.

வியாதி விபரப் பேப்பர் பத்து சதம் அனுபி
பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். டி. மதுர நாயகம்**
**அன் கம்பெனி,**
**மதுரநாயகம் வைத்தியசாலை,**
211, செட்டியார் தெரு, கொழும்பு 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனக்குரல்

### இரண்டோடு பதினொன்று

சேர் எஸ். ஆர். சர்மா என்ற கல்கத்தா பத்திரிகைக்காரர் ஒருவர் இலங்கைக்கு வந்திருக்கிறார். அவர் பிரதம மந்திரியைப் பேட்டி கண்ட பிறகு இலங்கை-இந்தியர் பிரச்னையில் பிரதமரின் நடவடிக்கைகளுக்கு சப்பைக்கட்டுக்கட்டியும், காங்கிரஸ் தலைமையைத் தூற்றியும் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். திரு. டட்லி தனது இந்தியர் எதிர்ப்புக்கு அவரையும் உபயோகித்துக் கொண்டார். இரு லட்சத்திலிங்கங்களுடன் ஒரு சாமா. அதுதான் எங்கள் தீர்ப்பு. இதுவரை ஏகாதிபத்திய 'சேர்' பட்டத்தை விடாதவரும், மிதவாதியும், இந்திய அரசியலில் நேரடியாக ஈடுபடாதவருமாகிய சேர் சர்மாவின் அறிக்கையால் இலங்கை-இந்தியர் பிரச்னை பாதிக்கப்பட முடியாது என்பது நிச்சயம்.

என். கருப்பையா
ஸ்டேஷன் ரோட்,
பதுளை

### ரேடியோ சிலோனில் பாரபட்சம்

ரேடியோ சிலோன் அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டுமே சந்தர்ப்பம் அளிக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதிலும் இலங்கையா இந்தியா என்ற வேற்றுமை பாராட்டப்படுகிறது.

கலை விழாவுக்கு டிக்கட் கோரி கடந்த ஒரு வருட காலமாக நான் விண்ணப்பித்துக் கொண்டேயிருந்தும் இதுவரை பதில் கிடையாது. எனக்குப் பின் விண்ணப்பித்துக்கொண்ட இலங்கை நண்பர்கள் முன் டிக்கட் பெற்றுக் கொண்டார் என்பது எனக்குத் தெரியும். ரேடியோவின் சாதாரண நேயர்களிடத்தில் இவ்வித பாரபட்சம் காட்டுவதால் கலை வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை ஏற்படுமென ரேடியோ சிலோன் அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

'நியாயவாதி'
225, 5ம் குறுக்குத் தெரு
கொழும்பு
10-7-52

### நிறுத்துவார்களா?

ஏருவூர் 4ம் குறிச்சயிலிருக்கும் பத்திரகாளியம்மன் கோவிலின் திருவிழா சமீபத்தில் நடைபெறவிருக்கிறது. இந்தக் கோவிலில் வருடாவருடம் திருவிழா வைபவ முடிவில் ஆடு கோழிகளைக் காளிக்குப் பலி கொடுப்பது வழக்கம். இலங்கையிலுள்ள பல காளி கோவில்களில் பலி கொடுப்பதை நிறுத்திவிட்டபடியால் இக்கோவிலிலும் பலி கொடுப்பதை நிறுத்துவார்களா?

கே. கனகசூரியம்
ஏருவூர்,
செங்கலடி.

# சுதந்திரன்

SUTANTIRAN

194, தட்டாதெரு போன்: 3411

1952 ஜூலை மீ 13 உ

## நித்தியகண்டம் நீங்கிற்று

அகில இந்தியாவிலும் சென்னை ராஜ்யத்தின் அரசியல் தனித் தன்மை வாய்ந்ததாகும். டில்லி மக்கள் சபையைவிட சென்னை அசெம்பிளி நடவடிக்கைகளில்தான் இந்தியப் பத்திரிகைகள்கூட அதிக கவனம் செலுத்துகின்றன.

கடந்த வாரம் ராஜாஜிமீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் 51 வாக்குகளை அதிகப்படியாகப் பெற்று நிறைவேறியது. அருப்புக்கோட்டைத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வியடைந்ததாலும், தனது நிலைமையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும் இத்தீர்மானம் கொண்டுவரப் படுவதாக ராஜாஜி கூறினார்.

வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் சேர்க்கப்பட்டிருப்பதை எதிர்த்துக் கிளம்பும் கண்டன அலைகளைத் தடுப்பதற்கே இப்பொழுது இத்தீர்மானம் பிரரேபிக்கப்படுவதாக எதிர்க் கட்சியினர் கூறினர். ராஜாஜி மந்திரி சபையின் நியமனத்தை எதிர்க் கட்சியினர் தொடர்ந்து ஆட்சேபணை செய்து வருவதால் இம்மாதிரி ஒரு தீர்மானத்தின் மூலம் சபையின் நம்பிக்கையைப் பெறவேண்டுமென்று ராஜாஜி பதவிக்கு வந்ததிலிருந்து திட்டமிட்டிருந்தார்.

சரியான சந்தர்ப்பமும் தகுந்த காரணங்களும் கிடைக்கும்வரை அவர் காத்திருந்தார். அதற்கு ஆரம்ப ஏற்பாடுகளாக என். ஜி. ஓக்களின் (சர்க்கார் அஸ்திவார சிப்பந்திகளின்) குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வசதி அளித்ததுடன், உணவுப் பொருள் பங்கீட்டையும் திடீரென ரத்துச் செய்துவிட்டார். இலவசக் கல்வி வசதி என். ஜி. ஓக்களை ஓரளவு திருப்தி படுத்தியிருக்கிறதென்பது உண்மையே.

உணவுப் பொருள் பங்கீடுதான் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் காங்கிரஸ் தோல்விக்கு முக்கிய காரணம். "ஆறு அவுன்ஸ் காங்கிரஸ் ஒழிக" என்று தேர்தல் சமயத்தில் எங்கும் கோஷம் கிளம்பிற்று. இதனை நன்குணர்ந்திருந்த ராஜாஜி திடீரெனப் பங்கீட்டை ரத்துச் செய்ததின் மூலம் மக்களின் ஆதரவுக்கு ஆளாகிக் கொண்டார். ஆனால் பங்கீடு ரத்துச் செய்யப்பட்டதன் நீண்டகால விளைவு பாதகமாக இருக்குமென்று கூறப்படுகிறது. ராஜாஜி ஆட்சிப் பொறுப்பை ஏற்று 80 நாளைக்குள் இவ்விரு சலுகைகளும் அளிக்கப்பட்டனவென்பது குறிப்பிடத்தக்கது.

இச்சலுகைகள் அளிக்கப்பட்ட பிறகு நம்பிக்கைத் தீர்மானம் பிரரேபிக்கப்பட்டதால், 'ராஜாஜி ஒன்றுமே செய்யாமல் சபையின் நம்பிக்கையைக் கோருகிறார்' என்று குற்றம் சாட்டுவதற்கு எதிர்க் கட்சியினரால் முடியவில்லை. பங்கீட்டை ரத்துச் செய்வதற்குமுன் சபையைக் கலந்து கொள்ளாதது ஜனநாயக விரோதச் செயலாகும் என்று ஒரு சோஷலிஸ்ட் பிரமுகர் குறை கூறினார். அதற்கும் சேர்த்துத்தான் நம்பிக்கைத் தீர்மானமென்றார் ராஜாஜி. இந்நிலையில் தீர்மானம் நிறைவேறியது ஆச்சரியமன்று.

ராஜாஜியின் வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. புதிய வரிகளைக் கண்டுபிடிப்பதில் ராஜாஜி "பலே பேர்வழி" என்று கூறப்படுகிறது. இப்பொழுது மைலுக்கு ஒரு தம்பிடி வீதம் பஸ் பிரயாணிகள் மீது ஒரு புதிய வரிப் பளுவைச் சுமத்தியிருக்கிறார். இதனை எதிர்க் கட்சிகள் மட்டுமின்றி காங்கிரஸ் காரர்களே சிலர் கண்டிக்கின்றனர். பத்திரிகைகளும் ஆட்சேபிக்கின்றன.

சென்னை அசெம்பிளியில் காங்கிரஸ் பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெறாவிட்டாலும், ராஜாஜி தலைமையில் அமைக்கப்பட்ட மந்திரிசபை நிலைத்து நின்றுவிட்டதென்றுதான் கூறவேண்டும். இருமுறை நடந்த வஷப் பரீட்சைகளில் அது வெற்றியடைந்துவிட்டது. இதற்கு மூன்று அடிப்படை காரணங்களுண்டு. ராஜாஜியின் ராஜதந்திரமும், சட்டசபை அனுபவமும் ஒரு முக்கிய காரணமாகும். மந்திரி சபைக்கு நெருக்கடிகள் ஏற்படும் போதெல்லாம் அதற்குக் கைகொடுத்துக் காப்பாற்ற ரங்கா கட்சியும், முஸ்லிம் லீகும், சில சுயேச்சைகளும் தயாராக இருப்பது இரண்டாவது காரணமாகும். எதிர்க்கட்சிகளிடையே போதிய ஒற்றுமை இல்லாமலிருப்பது மூன்றாவது காரணமாகும். ஆகவே ராஜாஜி மந்திரிசபைக்கு பூரண ஆயுசு நித்திய கண்டம் என்பது இல்லை என மாறிவிட்டது.

## கண்டதும் கேட்டதும்

தியாகி

கொழும்பில் உள்ள திருக்கோணமலை வாசிகள் ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள். "இந்தச் சங்கம் இருந்து என்ன பயன்? திருக்கோணமலைக்காக இது ஒரு துரும்பைத்தானும் இதுவரை எடுத்துப் போடவில்லையே" என்று பலர் குறைப்பட்டு வந்தார்கள். அவர்களுடைய குறையெல்லாம் நீக்கும்படியாக ஒரு நல்ல முயற்சியைச் செய்வதற்கு இச்சங்கம் முற்பட்டிருப்பதைப் பார்த்தால் தமிழரசு இயக்கம் திருக்கோணமலை மக்களிடம் சற்று சுயவிழிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

இந்தச் சங்கத்தினர் 13ந் தேதி ஞாயிற்றுக்கிழமை திருக்கோணமலை பெரிய மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தப்போகிறார்களாம்.

அவர்கள் தங்கள் துண்டுப் பிரசுரத்தில் "உங்கள் பிள்ளைகளின் பிற்கால நலனைப் பாதுகாப்பது உங்களின் கடமை. உங்கள் ஆதரவைப் பொறுத்ததே நமது வெற்றி. ஆகவே நீங்கள் தவறாது சமூகமளித்து உங்கள் ஆதரவைத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்' என்கிறார்கள். எதற்கு ஆதரவு?

திருக்கோணமலையில் ஒரு அரசாங்க மத்திய பாடசாலையை நிறுவும்படி அரசாங்கத்தை வேண்டுதற்குத்தான்.

நல்ல முயற்சி. வெற்றி பெறவேண்டும் என்றே நாமும் விரும்புகிறோம்.

திரிகோணமலைக்கு ஒரு மத்திய பாடசாலையோ அன்றி ஒரு அரசாங்கக் கல்லூரியோ மிக மிக அவசியம். அங்குள்ள சில பாடசாலைகளில் நடக்கும் கந்தர கோலங்களையும் நிர்வாக ஊழல்களையும் பற்றி நமக்கு அடிக்கடி கடிதங்கள் வருகின்றன. அவற்றை இன்னொரு சமயம் ஆராய்வோம்.

* * *

திருக்கோணமலையென்றதும் திருக்கோணமலையில் நடைபெற்ற ஒரு தனி நபர் உண்ணாவிரதத்தைப் பற்றியும் குறிப்பிடவேண்டியிருக்கிறது. இந்த உண்ணாவிரத செய்தியைப் படித்து கொக்குவில்—நந்தாவில் வாசிகள் தலை குனிவார்களாக.

கொக்குவில்— நந்தாவில் அம்மன் கோவில் திருவிழா காலங்களில் "சின்னமேளம்" எனும் சதிர் ஆட்டம் நடைபெற்று வந்தது. ஒரு காலத்தில் கடவுளின் திருச் சந்நிதானத்தில் பிரார்த்தனைக்கும் ஆராதனைக்கும் இடமளியாது இந்த சதிராட்டத்திற்கு இடமளிப்பது சரியல்ல என்ற அறையில் நான்கு முழமும் தோளில் நான்கு முழமும் போட்ட ஒரு

தமிழ் ஆசிரியர் கருதினார். இந்த ஆசிரியர் அப்போது கொக்குவில் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் கடமையாற்றி வந்தார்.

சதிர் ஆட்டம் கூடாதென்று மேற்படி கோவில் வீதியில் உண்ணாவிரதம் ஆரம்பித்தார். மக்கள் பெருந்திரளாக்க கூடி சதிர் ஆட்டத்தை நிறுத்துவதாக கோவில் தர்மகர்த்தாக்



களிடம் வாக்குறுதி பெற்றனர். சதிர் ஆட்டம் நிறுத்தப்பட்டது. இது 1950ல்.

இவ்வருடம் திரும்ப இந்த சதிர்ச் சனியன் மேற்படி கோயிலில் புகுந்து கொண்டதாம். இப்போது இந்த காந்திய ஆசிரியர் திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் படிப்பிக்கிறார். ஆயினும் விட்டாரில்லை. திருக்கோணமலையில் ஐந்து நாள் உண்ணாவிரதமும் மௌன விரதமும் நடத்திவிட்டார்.

மகாத்மா காந்தியடிகள் காட்டிய உண்மை அஹிம்சை என்பவற்றை ஆயுதங்களாகக் கொண்டு தீமையை எதிர்த்துத் தொண்டாற்றும் திரு பொ. கந்தையா ஆசிரியரின் உண்ணாவிரதம் கொக்குவில் மக்களின் மனதைத் தட்டி பிழையை உணரச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

நமது நாட்டில் 3ம் வகுப்பு ரயில் பிரயாணம் செய்வதைவிட பிராணனை விட்டுவிடுவது சுலபமான காரியம் என்று எண்ணும்படியிருக்கிறது. படுமோசமான பெட்டிகள் சுவர்கள் இடையுள்ள எல்லாம் மூட்டைப் பண்ணைகள். மூச்சு வாங்க முடியாத ஜனக்கூட்டம். வெய்யில் காலத்தில் போறணைப் புழுக்கம்.

இந்தமாதிரியாகக் கஷ்டப்படும் நாம் இந்திய மக்கள் சபையில் ரயில் மந்திரி லால்பகதூர் சாஸ்திரியினால் வெளியிடப்பட்ட ஒரு செய்தியைப் படிக்கும்போது தலைக்கு மேல காற்று வீசுவதுபோல கனவு காண்கிறோம்.

"இதுவரை இந்தியாவில் ஓடும் 3ம் வகுப்பு வண்டிகளில் 12,400 மின்சார விசிறிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. மேலும் 2000 வண்டிகளுக்கு விசிறிகள் பொருத்தப்படும்" என்பது தான் மேற்படி செய்தி.

இந்தச் செய்தியை எந்த பிரயாண விசிறிகளாவது காற்றுவாக்கில் கொண்டு போய் நமது போக்குவரத்து மந்திரி சேர் ஜோனின் காதில் போடமாட்டாவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில்:

# பிரதமரின் தம்பி கம்பனிக்குத் தலைவர்

## கல் ஓயா வியாபாரத்தில் கொள்ளை லாபமா?

திருடட்லி சேனநாயகாவின் தம்பி திரு ரொபர்ட் சேனநாயகா யுனைடட் டிராக்டர் அண்ட் எக்யுப்மெனட் கம்பெனி என்ற ஒரு கம்பெனியில் சேர்ந்து அதன் டைரக்டர்கள் போர்டு தலைவராகி இருதினங்களுக்குள் கல்லோயா இயக்கத்திற்கு தேவையான டிராக்டர்களையும் இதர தளவாடங்களையும் அரசாங்கம் பிரஸ்தாப கம்பெனியிலிருந்து ரூ 30 லட்சத்திற்கு டெண்டர் கோராமலே வாங்கியிருப்பதால் அரசாங்கத்திற்கும் அக்கம்பெனிக்குமிடையே நடைபெற்ற கொடுக்கல் வாங்கல் முழுவதையும் விசாரணை செய்வதற்காக ஒரு கமிஷன் நியமனம் செய்ய வேண்டுமென்று டாக்டர் என். எம். பெரேரா சென்ற புதன்கிழமையன்று பாராளுமன்றக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

தீர்மானத்தைப் பிரரேபித்து அவர் பேசும்போது பல ருசிகரமான தகவல்களை வெளியிட்டார்.

"இக்கம்பெனி 1947ல் ரூ 50000ம் மூலதனத்துடன்தான் ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. அமெரிக்காவில் காட்டர்பிலர் கம்பெனியின் இலங்கைப் பிரதிநிதியாக இது வியாபாரம் செய்தது. முதலில் நீர்ப்பாசன இலாகாவுக்குத் தேவையான தளவாடங்களை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து கொடுத்தது. அரசாங்கம் பணத்தை பாங்க்மூலம் அமெரிக்காவிலேயே செலுத்தி விட்டதால், இக்கம்பெனிக்கு மூலதனமின்றி வியாபாரம் செய்ய முடிந்தது 1949ல் ரொபர்ட் சேனநாயகா இக்கம்பெனியில் சேர்ந்ததும் ரூ. 30 லட்சத்திற்கு அரசாங்க ஆர்டர் கிடைத்தது அதன் பிறகு கல்லோயாவுக்கு தேவையான தளவாடங்களுக்கு அரசாங்க ஆர்டர்கள் கம்பெனியில் வந்து குவியத் தொடங்கின. ஆனால் இவைகளுக்கெல்லாம் டெண்டர்கள் கோரப்படவில்லை. திரு ரொபர்ட் சேனநாயகாவைக் கம்பெனியில் சேர்த்துக் கொண்டதை காட்டர்பிலர் கம்பெனி வெகுவாகப் பாராட்டியது. பிரஸ்தாபக் கம்பெனியில் வேலைபார்த்த காட்டர்பிலர் கம்பெனியின் பிரதிநிதி "டெயிலர்" என்பவர் அரசாங்கத்தால் கல்லோயாவுக்கு பரிசீலனைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

இக்கம்பெனிக்கு பணம் தேவைப்பட்டபோதெல்லாம் கல்லோயா போர்டுக்கு டெலிபோன் செய்து சில தளவாடங்களை அனுப்பி வைத்தது. அரசாங்க ஸ்டோர் அதிகாரி இக்கம்பெனியிடமிருக்கும் தளவாடச் சாமான்களைப்பற்றி விசாரணை செய்தபொழுது "எங்களிடம் ஒன்றும் கிடையாதே! என்று கம்பெனி பதிலளித்தது இக்கம்பெனியின் பெயரால் இறக்குமதி செய்யப்பட்ட சாமான்களைவிட அதிகப்படியான இயந்திரச் சாமான்களை அது அரசாங்கத்திற்கு விற்பனை செய்திருக்கிறது.

ஆகவே இந்தக் கொடுக்கல் வாங்கலில் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது கமிஷன் ஒன்றை நியமனம் செய்து இவ்விவகாரம் முழுவதையும் விசாரணை செய்தல் வேண்டும். கட்சியின் வெறும் பெரும்பான்மையைக்கொண்டு இத்தீர்மானத்தைத் தோற்கடித்து விடாமல் நாட்டின் நலனைக் கருதி ஒரு கமிஷன் நியமிக்க அரசாங்கம் முன்வர வேண்டும்."

தீர்மானத்தைப் பீட்டர் கெனமன் ஆமோதித்தார் பொதுக் கணக்குக் கமிட்டி இதனை விசாரணை செய்யலாமென்று பிரதமர் பதிலளித்தார்.

மூலதனமின்றி ஒரு கம்பெனி எப்படி வியாபாரம் செய்ய முடியும் என்று கேட்ட டாக்டர் பெரேரா பொதுக் கணக்குக் கமிட்டிக்கு இதை விசாரிக்கப் போதிய அதிகாரமிருக்கிறதென்ற பிரதமரின் கருத்தை ஒப்புக்கொள்ளவில்லை தீர்மானம் வாக்கெடுக்கப்பட்டுத் தோல்வியடைந்தது

### அன்று முதல்.........

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படும் பொழுதும் இலங்கை இந்திய காங்கிரஸ் இந்தியர் பிரச்னையை ஓர் முடிவிற்கு கொண்டு வர வேண்டுமெனக் கேட்டது. அப்பொழுதும் அதற்கு இணங்கவில்லை.

அதன் பின்பு அரசாங்கம் இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டம், இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம் குடியேற்ற வெளியேற்றச் சட்டம், நாணயச் செலாவணிச் சட்டம், பார்லிமெண்ட் தேர்தல் திருத்தச் சட்டம்போன்ற பல சட்டங்களை வேண்டுமென்றே இலங்கைவாழ் இந்தியர்களுக்கு விரோதமாக சிருஷ்டித்து நடைமுறைக்கும் கொண்டு வந்தது இந்தியர் பாகிஸ்தானியர் சட்டத்தை 1919 ஏப்ரல் 19ம் திகதியன்று ஹட்டனில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் வைத்து பகிஷ்கரிப்பதென முடிவு செய்யப்பட்டது. அன்று இலங்கை இந்திய காங்கிரஸ் தெரிவித்த காரணங்களை அரசாங்கமும் பொதுமக்களில் ஒரு சிலரும் மறுத்தனர். அதற்கான சாக்குப்போக்குகளும் கூறப்பட்டன. பின்னர் காங்கிரஸ் பகிஷ்காரத் தீர்மானத்தை வாபஸ்பெற்றது. அன்று காங்கிரஸ் கூறியவைகள் உண்மையானவையென்று இன்று ஒவ்வொருவரும் உணரத் தொடங்கிவிட்டனர் உதாரணமாக 1949ம் வருடம் ஆகஸ்ட் 5ம் திகதிமுதல் 1951ம் வருடம் ஆகஸ்ட் 5ம் திகதிகுள்ளாக சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் 237000ல் இதுவரை சுமார் 5000 மனுக்கள்தான் டைசல் செய்ய முடிந்ததென்று பார்லிமெண்டிலே பிரதமர் கூறுகிறார். ஆகவே இலங்கை இந்திய காங்கிரஸ் கூறியது உண்மை ... தாவது நம்பலாமல்லவா?

---

## நீதி மந்திரி பதவிக்கு நிதி மந்திரியின் தம்பி?

## சேர் உக்வத்த, ஜே.ஆர்.ஜயவர்தனுலடாய்

### சுகாதார மந்திரிக்கும் சீட்டு

இலங்கை மந்திரி சபையில் நெருக்கடி ஏற்படப் போகிறது சட்ட மந்திரி சேர் லலிதா ராஜபக்ஷ அமெரிக்காவுக்கு ஸ்தானீகராகவும், சுகாதார மந்திரி மேஜர் நுகவெல பிரிட்டனுக்கு ஹைகமிஷனராகவும் அனுப்பப்படுவார்களென்று தகவல் கிடைத்திருக்கிறது.

நிதி மந்திரி திரு ஜே. ஆர் ஜயவர்தன தனது தம்பி எச் டட்லியு ஜயவர்தனவை சட்ட மந்திரியாக்கிவிட வேண்டுமென்று பெரு முயற்சி செய்கின்றாராம் ஆனால் இப்பதவிக்காக நீண்ட நாளாகக் கனவு கண்டுக்கொண்டிருக்கும் யு. என். பி. பொதுக்காரியதரிசி சேர் உக்வத்தை ஜயசுந்தர இதைச் சுலபமாக விட்டுக்கொடுக்க மாட்டார்

சேர் உக்வத்த ஒருகாலத்தில் காலம் சென்ற பிரதமரின் வலது கையாக இருந்தவர். இப்பொழுது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. திரு ஜே. ஆர் ஜயவர்தனதான் இன்றையப் பிரதமரின் வலது கரம். முன்பொரு சமயம் சட்டமந்திரியாகச் சிறிது காலம் கடமையாற்றிய சேர் உக்வத்த இப்பதவிக்கு தனக்குள்ள உரிமையை நிச்சயமாக வற்புறுத்துவார். ஆனால் பிரதமரின் சித்தம் எப்படியோ? இதில் திரு ஜே. ஆர்: வெற்றியடைந்து விட்டால், சேர் உக்வத்த யு. என். பி. யிலிருந்தே வெளியேறிவிடுவார்: ஆகவே டட்லி என்ன செய்யப்போகிறார்?

---


## முக்கிய கவனிப்பு

எங்கள் உத்தரவாதம்பெற்ற மருந்துகளை பாவித்து நோய்களை அகற்றாமல் இன்னுமா கஷ்டப்படுகிறீர்கள் இரண்டே வேளையில் குணம்.

**சஞ்சீவிராம்**

நாள்பட்ட இருமல் புகைச்சல், காச இளைப்பு, சூலை வாய்வுக்குத்து, மூச்சுத் திணறல். நெஞ்சுவலி, கை, கால், இடுப்பு அஸ்தி இவைகளுக்கு உண்டாகும் வலி, இரண்டே வேளையில் குணம் காணலாம். புட்டி விலை 6-50

இருதய பெலமும் நரம்பு சக்தியும்

**ரேணி**

மூலச்சூடு. இரத்த கொதிப்பு, தேக வரட்சி, கை, கால் களைப்பு தேக பெலனில்லாமை ஊரல் தடிப்பு சொப்பன ஸ்கலிதம், மூளை பலவீனம் இவைகளை நீக்கி தேக சக்தியை அதிகப்படுத்தும் புட்டி விலை 6-50

**திருமேனி எண்ணெ**

உஷ்ணத்தாலும், அடிபிடிபட்டு நரம்புகளுக்கு கெடுதல் ஏற்பட்டு உண்டாகும் ஒற்றைத் தலைவலி, பீனிசம், அடிக்கடி தடுமல் இவைகளை உடனே கண்டிக்கும் புட்டி பெரியது விலை 5-00 சின்னது 3.00

**சென்ற்மேறி சர்வபடை சங்காரன்**

கடி விஷங்களினாலோ, உஷ்ணத்தாலோ இரத்தத்திற்கு கெடுதல் உண்டால் ஏற்படும் வெடிப்புகள் பற்றுகள், முகப் பருக்கள், தழ்வணிகள் தோல் சம்பந்தமான சகல பற்றுகளும் ஓரேவேளையில் குணம். புட்டி விலை 1-50.

**சர்வாங்க முக்குட்டு**

அடி, இடி, ஒடிவு இரத்தக் கட்டுகள் வாய்வுக்குத்து, வாதவலி குத்தல், உளைவு, நாரிப்பிடிப்பு இவைகளுக்கு ஓர் சிறந்த நிவாரணி புட்டி விலை 2-00

பாவிக்கும் முறைகள் மருந்துடன். எங்கள் மருந்துகளை விரும்புவோர்கள் தங்களின் பெயர் விலாசம் நோயின் குணவகைகள் முதலியவைகளை தெளிவாக எழுதவும்.

**பாரத பஸ்பம்**

தீராத ஆஸ்மா சம்பந்தமான வியாதிகளுக்கு ஓர் நிகரற்ற மருந்து. இருமல், சளி, காசம், இளைப்பு முதலிய

முதல்தர பஞ்சாப் குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோஷனை மொத்தமாகவும், சில்லரையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

கிடைக்குமிடம்.

சென்ற் மேரி வைத்தியசாலை

201, ... கொழும்பு



ஒளியிற் சிறந்தது சூரிய பிரகாசம்
பீடியிற் சிறந்தது கமலா பீடியே

★

கமலா, லீலா பீடிகளும் பீடிக்குத் தேவையான நாகபூர், சி...கறணி இலைகளும், ஆக்ஷு நிருபாணிபுகையிலைகளும சகாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம.

வி. பி. அவசியம் கவனிக்கப்படும.

**கமலா ஸ்டோர்ஸ்**

Proprietor S. V. பொன்னம்பலம்

10. செட்டியார் தெரு, கொழும்பு.

போன்: 3597. தந்தி. தாமரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அமைதி

"பித்தன்"

வாழ்க்கையையும் வாழ்வதற்கு வேண்டிய வழிவகைகளையும் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். உலகமும் உலகத்தின் உண்மையும் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் சமுகமும் அதன் சாக்காடும் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால்! சிந்திப்பவர்கள்தான் மிகக் குறைவு.

தெரிந்ததை சிந்திப்பதில்லை சிந்தனையில் கண்ட உண்மையை வாய்விட்டுச் சொல்வதில்லை; இந்த இரண்டையும் பின்னணியாகக்கொண்டதுதான் பெரிய மனிதத்தன்மை. இந்தப் பெரிய மனிதத்தன்மையால்தான் சமுகமே சாக்காடாகிவிட்டது ஏன்? மனிதனுமல்லவா பிணமாகிவிட்டான்.

வெறுப்புடன் மேஜைமேல் கடந்த கடிதத்தை பத்தாவது தடவை படித்தேன். அந்தக் கடிதம் சற்று நேரத்திற்கு முன்புதான் என் கையில் கிடைத்தது.

'நீண்டகாலமாக உங்களை இந்தப் பக்கமே காணவில்லை. உங்கள் நண்பர் (என் கணவர்) பயங்கரமான சூழ்நிலையில் சிக்கிச் சிதைந்துகொண்டிருக்கிறார். ஒருமுறை எங்கள் வீட்டுக்கு வாருங்கள், வந்து நல்ல புத்திமதியைச் சொல்லுங்கள் அவருக்கு. ஆண்டவன் உங்களைக் காப்பாற்றுவார்.'

உங்கள் சகோதரி
சமீமா

கடிதத்தைப் படித்துவிட்டுத் திரும்பவும் சிந்திக்க ஆரம்பித்தேன்.

'ரசீத்'—இதுதான் என் நண்பனின் பெயர்—எவ்வளவு நல்லவன்—பள்ளிக்கூட வாழ்க்கையில் ஒழுக்கத்துக்கும் நேர்மைக்கும் உதாரணமாக இருந்தான். ஒழுக்கமும் நேர்மையுமல்லவா அவனை அந்தப் பணக்காரக் குடும்பத்திற்கு மாப்பிள்ளையாக்கியது. ஆனால்! இன்று அவனுடைய நிலை என்ன? அவனைத்தான் மாற்றிக்கொண்டானா அல்லது தனக்குத்தானே திசை மாறிக்கொண்டதா? புரிந்துகொள்ள முடியாத ஒரு பிரச்னை இது

ரசீத்தின் மாற்றத்தை சமீமாவிடம் கேட்டால்? இப்படி ஒரு கேள்வி எழுந்தது எனக்குள்.

விவாகமான தம்பதிகளின் வாழ்க்கையில் ஏற்படும் கோளாறுகளைத் தீர்க்க வேண்டுமானால் கணவன் மனைவி இருவரையும் நெருங்கித்தான் முடிவு கட்ட வேண்டும். ஆனால்! சமீமாவை நெருங்க முடியாதே! அவள் இஸ்லாமியப் பெண் "ஆண்களின் கொடூரமான பார்வையிலிருந்து பெண்களை காப்பாற்றுங்கள்" என்று ... கூறி ... யார் தீர்க்கதரிசனம் கூறியதோ எனக்குத் தெரியாது நான் தெரிந்துகொண்டதெல்லாம் இந்தச் சமுகம் முட்டாள்தனத்திலே சாயந்தோய்த்தெடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான்.

"ஆண்டவன் உங்களைக் காப்பாற்றுவான்" என்று முடிவடையும் கடிதம் இன்னும் என் மேஜைமேல்தான் இருக்கிறது. இப்படி எத்தனையோ பேர் என்னை ஆசீவதித்திருக்கிறார்கள். ஆனால் யாருடைய வாழ்த்துதலும் பூர்த்தியானதாகத் தெரியவில்லை, ஏனென்றால் வாழ்க்கையில் அவ்வளவு கஷ்டம் எனக்கு. ஒருசமயம் 'ஆண்டவன் அருள்தான்' இந்தக் கஷ்டமோ? எது எப்படி இருந்தாலும் நண்பன் ரசீதைக் காண வேண்டும் அவன் வாழ்க்கையில் சூழ்ந்துள்ள பயங்கரமென்ன? என்பதை அறிய வேண்டும் என்ற எண்ணத்தில் அவன் வீட்டை நோக்கிச் சென்றேன்.

உலகம் மங்கிக்கொண்டிருந்தது. மலர்க்கரங்கள் மனை விளக்கேற்றும் நேரம் நான் அவன் வீட்டுக்குச் சென்றேன் ஆம் ஆறு மாதங்களுக்குப் பிறகு நான் எனது நண்பன் வீட்டு வாசலில் நின்று அவனைக் கூப்பிட்டேன். "உம்!" என்ற முரட்டுச் சப்தம் வந்தது. அதை அடுத்து ரசீதும் வந்தான். என்னைக் கண்டதும் அவன் தன்னைச் சரிப்படுத்திக்கொண்டு சிரிக்க முயன்றான் அவன் தோளில் கையைப் போட்டுக்கொண்டே சொன்னான்.

"எனக்குத் தெரியும் நீ என்றாவது ஒருநாள் என்னிடம் வருவாய் என்று"

அது எப்படித் தெரிந்தது உனக்கு? என்றேன்

ஆறு மாதங்களுக்கு முன் என்னிடம் சண்டைபோட்டுக்கொண்டு போகும் போதே எனக்குத் தெரியும் என்னை வெறுத்துத்தள்ள உன்னால் முடியாது என்று, ஏனென்றால் நம்முடைய அன்பின் தூய்மை அப்படி.

அவன் வார்த்தை என் உள்ளத்தைத் தொட்டது. அந்த வார்த்தையோடு கலந்து வந்த குடிநாற்றம் என் மூக்கைத் துளைத்தது. இருவருமாக அவன் ரூமுக்குள் நுழைந்தோம் வழியில் கதவு திறக்கும் சப்தம் கேட்டு நான் திரும்பிப் பார்த்தேன்.

ரசீத் ஒரு கதவைச் சுட்டிக்காட்டி "அதோ உன் தெய்வீக சகோதரி கதவிடுக்கால் உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான்.

நான் தலையைக் குனிந்து கொண்டேன். அவனுடைய ... மான ... புரிந்துகொள்ள ... லிருந்த ... அவன் ... பட்ட ... ற்றுவிட்டயாதெரி... எனக்கு. சிரித்துக்கொண்டே ரூமுக்குள் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தேன்.

'உனக்கு ஒரு புதுமை தெரியுமா? என்றான் ரசீத் என்ன என்று ஆவலுடன் கேட்டேன்.

"அவன் தன் மதப்பெண்களின் குறைபாடுகளை குடிப் போதையில் வெகு ஆபாசமாகச் சொல்லிக் கொண்டுபோனான.

அந்த ஏளனமான வார்த்தைகள் மேலும் அவனுடைய வாழ்க்கையைத் தெளிவாக்கியது ஏமாற்றப்பட்ட உள்ளம் நையாண்டி செய்கிறது சமுகத்தைப் பார்த்து. இது அவனுடைய இன்றைய நிலை இதைவிட வேறெதுவும் புரிந்துகொள்ளமுடியவில்லை

அவன் சிரித்தான்—சிரித்துக்கொண்டே மேஜை மீது பக்கவாட்டில் உட்கார்ந்தான். மேஜைமேல் இருந்த ஒரு விஸ்கி போத்தலை எடுத்து கிளாசில் ஊற்றிக் குடித்தான் பிறகு என்னைப் பார்த்து சிகரட் பக்கட்டை நீட்டினான் அவன் கண்கள் சிவந்திருந்தன. நன்றாகக் குடித்திருந்தான். நான் ஒரு சிகரட்டைப் பற்றவைத்துக் கொண்டே அவனிடம் கேட்டேன.

இந்தச் சாக்கடைத் தண்ணீர் இருந்துவிட்டால் உலகத்தில் வேறெதுவும் உனக்குத் தேவையில்லையல்லவா? என்று

அவன் சிரித்தான், மேஜைமேல் கையால் ஓங்கியடித்துக்கொண்டே அவன் சிரித்தான் பிறகு அவன் சொன்னான்.

"இதுவா சாக்கடைத் தண்ணீர்? இந்த உலகம், சமுகம், இந்த வீடு, நீ, நான் எல்லாமே சாக்கடைத் தண்ணீர்தானே? ஆனால் இது தன்னுருவத்தை மாற்றவில்லை அவ்வளவுதான வித்தியாசம். மேஜைமேல் இருந்த விஸ்கி போத்தலை எடுத்துத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு சோகமாக என்னைப் பார்த்தான். பிறகு மங்கிய குரலில் சொன்னான்.

"நண்பா! இதைச் சாக்கடைத் தண்ணீரென்று சொல்கிறாய் நீ! ஆனால் இதுதான் என்னுலகம், வாழ்க்கை, மனைவி, எல்லாம் இப்படிச் சொல்வது ஆச்சரியமாய் இருக்கலாம். இது என்னைத் தன் பக்கம் இழுத்துக் கொள்ளவில்லையெனறால், உன் நண்பன் இல்லை. ஒன்று ஊரை விட்டு ஓடியிருப்பேன். அல்லது உயிரை விட்டிருப்பேன்"

குடிகாரனாக வாழ்வதைவிட உயிரைவிடுவது எவ்வளவோ மேல் என்றேன் நான்.

"நான் குடிகாரன்! ஏன்? அப்படித்தான் நீ சொல்கிறாய். நீ மட்டுமென்ன இந்தப் பகுதியே அப்படித்தான் சொல்கிறது. ஆனால் நான் ஏன் குடிகாரன் ஆனேன் என்பது உனக்கும் தெரியாது இந்த ஊருக்கும் தெரியாது உலகத்தைக் கேள் அது பதில் சொல்லாது. என்னுடைய உள்ளத்தைக் கேள அது உனக்கு நீண்ட பெரிய கதையைச் சொல்லும். அவன் கொஞ்சம் விஸ்கியை அருந்திவிட்டு மேலும் தொடர்ந்து பேசினான்

"இயற்கை மனிதனுக்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறது. மனிதனும் இயற்கைக்கு கடமைப்பட்டிருக்கிறான் இயற்கையால் மனிதன் சிறந்தான், மனிதனால் இயற்கை சிறந்தது. இந்த இரண்டு சக்திகளுக்கும் மத்தியிலேதான் வாழ்க்கை, அறிவு, ஆராய்ச்சி என்ற தத்துவங்கள் பிறந்தன வாழ்க்கைக்கு தத்துவங்கள் உதவாது என்று சொல்கிறார்கள், மனிதனே தத்துவமாக விளங்கும்பொழுது தத்துவம் பேசக்கூடாது என்றால் அதற்கு அர்த்தம் இருக்கிறதா?"

இப்படி ஒரு கேள்வியைப்போட்டுவிட்டு என்னைப் பார்த்தான். ரசீத் நான் ஏதாவது பதில் சொல்வேன என்று அவன் எதிர்பார்த்திருக்கவேண்டும், என்றாலும் நான் ஒன்றும் சொல்லவில்லை. அவனுடைய இந்தத் தத்துவத்துக்கு பதில் சொல்ல வார்த்தை இல்லை என்னிடம்; நான் அவனையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவன் திரும்பவும் கிளாசில் விஸ்கியை ஊற்றிக் குடித்துவிட்டுப் பேசத் தொடங்கினான்.

"கணவன்-மனைவி என்றால் உணவும்-உடலும் தானா? உள்ளத்திற்கு அதில் பங்கு கிடையாதா? இன்று இந்த இஸ்லாமியக் குடும்பங்கள் இருதயமில்லாத வாழ்க்கை தானே வாழ்ந்துகொண்டிருக்கின்றன! ஊரோடு ஒத்து வாழவேண்டும் என்பதற்காக மனிதன் தன் எண்ணத்தைக் கட்டுப்படுத்தலாமா?

"இயற்கை மனிதனுக்கு எண்ணற்ற இன்பங்களை வாரிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. அந்த இன்பத்தை தடை செய்ய ஒரு சமுகத்தின், ஒரு சாதியின் பண்பும், பழமையும் குறுக்கிடுமானால்! அந்த சாதியை, அந்த சமுகத்தைப்பற்றி நினைப்பதற்கு என்ன இருக்கிறது? காலைச் சூரியனின் கதிரொளியும், மாலைத் தென்றலும், முன்னிரவுச் சந்திரனும் இஸ்லாமியப் பெண்களின் ஜன்ம விரோதிகளா? இயற்கையின் இன்பத்தையும் புதுமையின் அழகையும் அனுபவிக்க கணவன் தனித்து நிற்க வேண்டுமானால்! வாழ்க்கையில் மனைவியின் பங்கு தான் என்ன?"

இந்த இடத்தில் அவனுடைய பேச்சுத் தடைப்பட்டது மேஜையிலிருந்து கிளாசை எடுத்து உறிஞ்சிவிட்டு ஒரு சிகரட்டைப் பற்றவைததான. சிறிது நேரம் கழிததுத் திரும்பவும் பேசினான்

"வாழ்க்கையில் மனைவியின் பங்கு என்ன என்

[15-ம் பக்கம் பார்க்க]



## ஜவஹர் சரிதை

ஆசிரியர்: சுகவனம்- சிவப்பிரகாசனார் கிடைக்குமிடம்: ஒற்றுமை ஆபீஸ் தியாகராய நகர் சென்னை விலை அணா 12.

உலகத்தின் மதிப்பையும் கவனத்தையும் கவர்ந்த உயர்ந்த தலைவர்களில் இன்று ஜவஹர் முன்வரிசையில் நிற்கிறார். கீழைத் தேசங்களுக்கே பெருமை அளிக்கக்கூடிய நிலையிலுள்ள அந்த வீர புருஷரைப்பற்றி எதிர்கால சந்ததியார் அறிந்துகொள்ள இந்த நூலும் பயனுள்ளதே கதை சொல்வது போல் எழுதப்பட்ட இந்த வரலாற்றுச் சுருக்கம் நம் கவன முழுவதையும் கவருவதோடல்லாமல் ஜவஹர் மீது நாம் வைத்துள்ள மதிப்பையும் பன்மடங்கு உயர்த்துவதாய் அமைகிறது. பாடசாலைகளுக்கு ஏற்ற நூல் என்று சிபார்சு செய்கிறோம்.

## தமிழ் முழக்கம்

ஆசிரியர்: கா மு ஷெரிப் கிடைக்குமிடம்; 136 ஜானி ஜான் கான் பகதூர் தெரு, சென்னை 14 விலை அணா 2

இந்தியாவில் ஒரு தமிழகம் ஏற்பட வேண்டுமென்னும் கிளர்ச்சிக்குப் பக்கபலமாக தொண்டாற்ற முற்பட்டிருக்கும் தமிழ் முழக்கத்தின் 11வது முழக்கம் கிடைக்கப்பெற்றோம். அரசியல் கட்டுரைகள் தமிழரசுக் கட்சியின் நிகழ்ச்சிநிரல், கதை, கட்டுரை, கவிதை ஆகியவை இடம் பெறுகின்றன.

[மேற்படி பத்திரிகை கொழும்பில் ஆர்ட முத்தூஸ் பப்பிளிசிட்டி, 120 வக்ஸால் வீதி என்ற விலாசத்தில் கிடைக்கும்]

## சூறாவளி

ஆசிரியர்: எம். ஏ. முகம்மது கிடைக்குமிடம்: 42/21 ஸ்டுவட் வீதி கொழும்பு 2 விலை ரு 1-25

வாழ்க்கையில் தென்றலை அனுபவிப்பவர்கள் ஆயிரத்தில் ஒருவரே. ஆனால் கஷ்டமும், துன்பமும், துயரமும் கலந்த நரக வாழ்க்கையை-சூறாவளியை அனுபவிப்பவர்கள் லட்சோபலட்சம் பேர். அவர்களில் ஆக பதின்மூன்று பேரை மட்டும் எடுத்துக்கொண்டு-அவர்களிலும் ஜுபைதா, நியாஸ் ஆகிய இருவரையும் மையமாக்கி வைத்து ஆக்கப்பட்ட நாடகம் இது. புஸ்தகம் முழுவதும் கிளேஸ் கடுதாசியில் அச்சிடப்பட்டிருக்கிறது. பக்கத்துக்குப் பக்கம் விளம்பரங்களை சேர்த்திருப்பதினால் வாசனை ஓட்டம் தடைப்படுவதுடன் கதையையும் சில சமயங்களில் மறக்கும்படியான நிலைமை ஏற்படுகிறது. இலங்கையிலேயே அச்சிட்டு, வெளியிடப்பட்ட இப் புஸ்தகம் நிலாப் பதிப்பகத்தின் முதலாவது வெளியீடாகும்.

எஸ். ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தமான் கைதி




## ஆர். கே. பிலிம்ஸாருக்கோர் அசல் தோல்வி

தமிழ்நாட்டில் பெரும் பரபரப்பையுண்டுபண்ணிய புரட்சிகரமான சீர்திருத்த நாடகம் அந்தமான் கைதி. கு. சா. கிருஷ்ணமூர்த்தியினால் எழுதப்பட்ட இந்த நாடகம் தமிழ்நாட்டில் பல பகுதிகளிலும் நாடகமாக நடிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கானவர்களின் பாராட்டுதலைப் பெற்றது. அதோடு மட்டுமல்லாமல் புஸ்தகமாகவும் அச்சிடப்பட்டு கடல் கடந்த தமிழர்கள் மத்தியில் மதிப்பையும் சம்பாதித்தது. இத்தனை சிறந்த நாடகத்தை ராதாகிருஷ்ணா பிலிம்ஸார் திரைப்படமாக்கி அதன் ஜீவனையே கொலை செய்திருக்கின்றார்கள். புஸ்தகத்தை படிக்கும்போது உண்டாகும் பல்வேறுபட்ட உணர்ச்சிகள் திரைப்படம் அமைக்கப்பட்டிருக்கும் லட்சணத்தில் தலைவலியை உண்டாக்குகின்றன.

திரைக் கதையில் எடிட்டிங் சுத்த மோசம். கு. சா. இயன் குறிக்கோள், அவர் கருத்து முற்றுஞ் சாகடிக்கப்பட்டிருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு நாடகபாணியில் நாகரீக காலத்து யுவர்களும் யுவதிகளும் ஒப்பாரி வைப்பதுபோன்ற துக்ககரமான கட்டங்களை அடிக்கடி பொருத்தி படம் பார்ப்பவர்களின் சோதனைக்கு பரீட்சை நடத்துகிறார்கள்.

### நடிகர்கள்

தமிழ்நாட்டு முதல்தர நடிகர்கள் வரிசையிலுள்ள எம். ஜி. ராமச்சந்தர். டி. எஸ். பாலையா, கே. சாரங்கபாணி பி. கே. சரஸ்வதி ஆகியவர்களுடன் படத்திற்காக முகம் வெட்டும், தமிழ் வசனங்களை உச்சரிக்க முடியாத மலையாளப் பேர்வழிகளையும் சேர்த்து கண்ணீர் விட வேண்டிய இடத்தில் சிரிப்பையும்-சிரிக்க வேண்டிய சிருங்கார கட்டத்தில் சிறந்ததையும் சினிமா வசிறிகளிடத்தில் உண்டுபண்ணியிருக்கிறார்கள். கதையில அற்புதமான குணசித்திர பாத்திரம் பாலு ஐயரீந்தார். இந்த திறமையான பாத்திரத்தை தீக்தரிச்சி என்ற தமிழ் பேசவும் தெரியாத-படத்திற்கு லட்சணமற்ற பேர்வழியிடம் கொடுத்து பாழாக்கியிருக்கிறார்கள். அவ்வளவுக்கு தமிழ்நாட்டில் நடிகர்கள பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா?

### குறைபாடுகள்

முதலாவதாக எடிட்டிங்கைப்பற்றித்தான் சொல்லவேண்டியிருக்கிறது. சிறைச்சாலையில் பாதிரியாரை கட்டிப்போட்டுவிட்டு சம்பிரீட்டிய சிறைக் கைதி நடராஜன் எல்லார் மத்தியிலும் நடமாடிக்கொண்டு திரிகிறார்.

ஜம்புவை கத்தியால் வெட்டிய ஆசாமி யாராயிருக்கலாமென்பது கதையின் கடைசிவரை அறியாதவாறு அமைக்கப்பட்டிருக்கிறது. வள்ளி வயிற்றுப் பிள்ளையின் கதி யாருக்குமே புலனாகவில்லை. எடிட்டிங் மோசத்தினால் கதை ஒரே குழறுபடியாக இருக்கிறது. பாட்டுக்கள் பாரதி பாடலைவிட பாராட்டற்குரியவை ஒன்றுதானும் கிடையா.

### நிறைவுகள்

நடராஜன் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் எம். ஜி. ராமச்சந்திரா ரசிகர்கள் பாராட்டுதலுக்கு இலக்காகிறார். ஜம்புவாக வரும் பாலையா ஒரு அசல் 'வம்பனுக்' வழக்கமான தோரணையில் நடித்திருக்கிறார். லீலாவாக வரும் பி. கே. சரஸ்வதியின் தோற்றம் கவர்ச்சியாயிருக்கிறதே தவிர நடிப்பில் நிறைவு காணப்படவில்லை.

### நமது முடிவு

இந்த விமர்சனத்தின் ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்ட அதாவது நாடக மூலம் நல்ல பெயரைச் சம்பாதித்த இக்கதை திரைப்பட மூலம் களப்பலி செய்யப்பட்டிருக்கிறது என்பதுதான் நமது முடிவான தீர்மானம். நாடு எதிர்பார்த்த அளவு இப்படம் வெற்றி பெறவில்லை. ராதாகிருஷ்ணா பிலிம்ஸாருக்கு இப்படம் ஒரு தோல்வி

—எஸ். ஆர்.

### 'மான்டி கிரிஸ்டோ'

"மான்டி கிரிஸ்டோ" என்ற உலகப் பிரசித்திபெற்ற நாவலை படமாக்க திட்டமிட்டு அதற்கான ஏற்பாடு செய்து வருகிறார் டைரக்டர் பெ. ப்டராஜ். கதை-வசனம் எல்லாம் தயாராகிவிட்டது. பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகிவிட்டன. படம் செட்டுக்குள் போக வேண்டியதுதான் பாக்கி. சகஸ்ரநாமம் சக்ரபாணி ஆகிய இருவரும் இதில நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

### சினிமா செய்திகள்

உலகிலேயே சினிமா உற்பத்தி விஷயத்தில் 2வது ஸ்தானம் வகிக்கும் இந்தியாவின் சினிமா நகரான பம்பாயில் 1949ல் 174 படங்களும் அதற்கு அடுத்த வருஷம் 144 படங்களும் நடந்த வருஷம் 118 படங்களுமே தயாரிக்கப்பட்டன. இந்த வருஷம் முதல் 3 மாதங்களில் 35 படங்கள் தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால கடந்த வருஷம் இதே காலத்தில் 50 படங்கள் தணிக்கையாயிற்று.

உயர்தர படங்கள் தயாரித்து வெளியிடும் கல்கத்தாவில் 1949ல் 82 படங்களும் அதற்கு அடுத்த வருஷம் 51 படங்களும் நடந்த வருஷம் 45 படங்களுமே தயாரிக்கப்பட்டன.


வட இந்தியாவுக்கு மாறாக தென்னிந்தியாவில் சினிமா உற்பத்தி அதிகரித்துள்ளது.

1949ல் 33 படங்களும் அதற்கு அடுத்த வருஷம் 46 படங்களும் கடந்த வருஷம் 48 படங்களும் தயாரிக்கப்பட்டன.

முருகன் (ஜிந்துப்பிட்டி) செண்ட்ரல் (மாத்தளை) மனோகரா (யாழ்ப்பாணம்)

ஆரம்ப நாள்தொடக்கம் ஆயிரக் கணக்கானோர் பார்க்கின்றார்கள் !

உற்சாகமூட்டுவாள்-கண்ணீர்வடிக்கசெய்வாள்-குலுங்கக்குலுங்க சிரிக்க வைப்பாள்!




அவளின் அழகும், இனிமையும் ஒருங்கே ஜொலித்தன ஆனால் பாவம், மின்னல் ஒளியால் கண்பார்வையை இழந்தாள்.

காதலுக்காக! தனது ஐஸ்வரியம், புகழ் எல்லாவற்றையும் பரித்தியாகம் செய்கிறார் ஆனால் சோற்றுக்கு திண்டாடிய நிலைமையில் ரிக்ஷா வண்டி இழுத்து உயிர்வாழுகுறுன் ஓர் பணக்கார யுவன்

பட உலகில் ஓர் புதுமை! கதை உலகில் ஓர் புரட்சி!

என் தங்கை

மாதுரிதேவி, ஈ. வி. சரோஜா, பி. சுசீலா, எம். ஜி. ராமச்சந்திரன், ...பாரதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரஜாவுரிமை பெறுவதில் மிகப் பெரிய நிர்வாக சங்கடம்

## அகற்ற முடியாதென்று பிரதமர் கைவிரிப்பு

இலங்கை-இந்தியர் காங்கிரஸ் தொடங்கிய சத்தியாக்கிரகம் பிரதமர் காரியாலயத்தின் முன்னால் தொடர்ந்து நடைபெறுகிறது. தற்போது போராட்டத்தை விஸ்தரிப்பதில்லையென்று காங்கிரஸ் முடிவு செய்திருப்பினும், பிரதமர் காரியாலய வராந்தாவில் நடைபெறுகின்ற சத்தியப் போரில் எத்தகைய மாற்றமும் கிடையாது

இந்தியப் பத்திரிகைகளெல்லாம் இலங்கை சர்க்கார் இந்தியர்களுக்கு ஏராளமான சலுகைகளையும் உரிமைகளையும் வாரிக் கொடுத்துவிட்டதைப் போல தங்களின் தொனியை மாற்றி எழுதத் தொடங்கிவிட்டன காங்கிரஸ் பிரதமருக்குச் சமர்ப்பித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு கோரிக்கைகளில் இரண்டு கிடைத்துவிட்டன. ஆகையால் சத்தியாக்கிரகம் பாதி வெற்றியடைந்துவிட்டது என்றெல்லாம் சில பத்திரிகைகள் எழுதின. இது உண்மை நிலைமையை உணராது ஒரு துளியை பெரிய வெள்ளமாக்கிக் காட்டுவதாகும் சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெறுவதிலிருந்தே இந்தியர்களின் அடிப்படை உரிமைகள் இன்னும் அளிக்கப்படவில்லையென்பது தெளிவாகும். "இன்று கிடைத்திருப்பது கோரிக்கைகளில் இரண்டுதான்" என்று இலங்கை-இந்தியர் காங்கிரஸின் அறிக்கையும் தெளிவுபடுத்துகிறது.

### முக்கிய சங்கடம்

பிரஜாவுரிமை மனுக்களைப் பைசல் செய்வதிலுள்ள ஏராளமான நிர்வாக சங்கடங்களில் இரண்டே இரண்டு மட்டும் தளர்த்தப்பட்டிருக்கின்றன. அதிலும் முக்கியமான சங்கடம் நீக்கப்படவில்லை.

மனுதாரர்கள் 1936 முதல் இலங்கையில் தொடர்ந்து வசித்து வருகிறார்களென்பதை நிரூபிக்க ஒவ்வொரு வருடத்திற்கும் போதிய ருஜுக்கள் தஸ்தாவேஜு ரூபமாகக் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு வாசகால யோக்கியதாம்சத்தை நிரூபிப்பது மனுதாரர்களில் 100ல் 10 பேருக்குக்கூட சாத்தியமில்லை. இந்த சங்கடத்தைப் போக்காதவரையில் வேறு எதைச் செய்தாலும் கோரிய பலன் கிட்டப் போவதுமில்லை. இச்சங்கடத்தை நீக்க முடியாதென்றும், அதனை நீக்குதல் சட்டத்தையே திருத்தியமைப்பதாகுமென்றும் அதற்குத் தான் தயாரில்லையென்றும் பிரதமர் டட்லி சேனநாயகா கையை விரித்துவிட்டார். இந்த லட்சணத்தில் உரிமைப் போராட்[டம்] 100க்கு 50 வெற்றி[...] கூறுவது முற்றிலு[...]

கும் இரு சலுகைகள்மூலம் சுமார் 7 லட்சம் மனுதாரர்களில் ஒரு சில ஆயிரம் பேர் கூட பயன் பெறுவது கடினம்.

முக்கியமான சங்கடங்களையெல்லாம் நீக்கி, அல்லது பிரஜாவுரிமைச் சட்டத்தையே மாற்றியமைத்து பெரும்பாலான இந்தியர்கள் பிரஜாவுரிமைப் பெறக்கூடிய வசதிகளைச் செய்வதற்கு இது வரை யு. என். பி. அரசாங்கம் தயாரில்லையென்பது தெளிவாகிவிட்டது.

ஆதலால் சத்தியாக்கிரக இயக்கம் தொடர்ந்து நடைபெறுகிறது.

### இந்தியச் சட்டம்

இந்திய அரசியல் சட்டப்படி இந்தியாவில் ஐந்தாண்டுகள் வசித்த அயல்நாட்டவர் இந்தியாவின் பிரஜைகளாகிவிடுவர். வெளிநாட்டவர் இந்தியாவில் வாக்குரிமை பெறுவதற்கு அங்கு 6 மாதங்கள் வசித்தால் போதும் இந்தியாவில் குடியேறியிருக்கும் அயல்நாட்டு மக்களுக்கு இச்சலுகைகளை அளித்ததால் இந்திய நாடு அழிந்துவிடவில்லை.

இம்மாதிரி உரிமைகளை இலங்கைவாழ் இந்தியர்களுக்கு ஏன் அளிக்கக் கூடாது? இந்நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்காக இரத்த வியர்வை சிந்திய, இன்றும் நாட்டின் தேசிய வருமானத்தில் 65 சத விகிதம் சம்பாதித்துக் கொடுக்கும் இலங்கை-இந்தியர்களுக்கு சாதாரண உரிமைகளை அளிப்பதற்கு எந்த ஜனநாயக சர்க்காரும் அஞ்ச வேண்டியதில்லை.

இந்தியர்களுக்கு உரிமைகள் அளிக்கப்பட்டால் பாராளுமன்றத்தில் யு. என் பியின் ஆசனங்கள் குறைந்துவிடுமே என்ற தீய எண்ணமிருக்கும்வரை ஜனநாயகமும் நியாயமும் ஆட்சியாளர்களிடம் தலை காட்ட முடியாது.

---

**ரஞ்சிதம் ...........**

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சாரி ஒன்றை எடுத்து உடம்போடு ஒட்டியபடி உடுத்துக்கொண்டு நிலைக் கண்ணாடிக்கெதிரில் நின்று கலைந்து கிடந்த கூந்தல்களை சீப்பினால் வாரி ஒதுக்கிவிட்டாள். காலையில் லைசா மேஜையில் கொண்டுவந்து வைத்திருந்த மலர்க் கொத்திலிருந்து புததம் புதிய மூன்று காட்டு ரோஜாக்களைப் பொறுக்கி எடுதது இரண்டைக் கொண்டையில் சொருகினாள். மற்றதை இடதுபக்க மார்பில் ஒரு புருச்சைக்குத்தி அதில் சொருகிவிட்டாள்

இயற்கையிலேயே அதிரூப சுந்தரியான பிரேமாவதி செயற்கை அலங்காரங்களால் தேவ கன்னிகை போல் காட்சியளித்தாள். கண்ணாடியில் தெரிந்த தனது பிரதி பிம்பத்தைப் பார்த்து முல்லைப் பல் தெரியப் புன்முறுவல் செய்தாள். அவளுடைய அலங்காரமும் அவள் காட்டிய பரபரப்பும் அவள் யாரையோ எதிர் பார்க்கின்றாளென்று பறைசாற்றின. வாசற் கதவையும் சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தையும் மாறிமாறிப் பார்த்தாள். 'காமலாஸ்தி' (சாப்பாடு ஆயத்தம்) என்று லைசா கூறியதைக் கேட்டும் பேசாமலிருந்தாள். ஆசாமி வந்துபோன பின்னர் சாப்பிடுவோமே என்று அவள் பேசாமலிருந்தாளென்று அவள் முகபாகம் காட்டிற்று ஆனால் அவள்வாய் திறந்து லைசாவிடம் அதைச் சொல்லவில்லை. லைசா இன்று நேற்று அந்த வீட்டில் வேலைக்கு வந்தவளல்லவே. அவளுக்குத் தெரியாதா நோனாவின் நோக்கம்.

பிரேமா பன்னிரண்டாவது தடவையாக நிலைக் கண்ணாடிமுன் நின்று தனது அலங்காரத்துக்கு மெருகு கொடுத்துக்கொண்டிருக்கையில் வாயிற்படியில் பூட்ஸ் சப்தம் கேட்டது. நாணிலிருந்து விடுபட்ட அம்பென அம்மங்கை வாயிலை நோக்கி விரைந்தாள்.

(தொடரும்)

---

# யாழ்ப்பாணக் கமக்காரரின் கஷ்ட நிலை

இலங்கையில் அதிகமாக மிளகாய், வெங்காயம், புகையிலை செய்கை பண்ணப்படும் இடங்களில் பிரதானமானது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணக் கமக்காரரின் பொருளாதாரம் இவற்றில்தான் தங்கியிருக்கின்றது.

வெங்காயச் செய்கையை விருத்தி செய்வதற்காக, ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்ட காலத்தில் கமக்காரருக்கு இலவசமாக வெங்காயம் கொடுக்கப்பட்டது. ஆனால் நம் நாடு சுதந்திர நாடாக மாறியபின் அரசாங்கம் இவ்விஷயங்களில் சிரத்தை காட்டுவதாகத் தெரியவில்லை. நம் நாட்டில் விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் தோன்றின. சங்கங்களின் மூலம் கமக்காரருக்கு விதை வெக்காயம் கொடுக்கப்பட்டது. கமக்காரரின் வெங்காயம் சங்கத்திற்கூடாக விற்பனவு செய்யப்பட்டது. இதற்கு முந்திய வருஷங்களில் விதை வெங்காயம் அந்தருக்கு ஐந்து ரூபா வீதம் பெற்றுக்கொண்டு கமக்காரருக்குக் கொடுக்கப்பட்டது. மீதிப் பணத்தைக் கமக்காரர் தாங்கள் செய்கைபண்ணிய வெங்காயத்தைச் சங்கத்துக்குத் திருப்பிக் கொடுக்கும்போதே சங்கத்தார் எடுத்தார்கள்.

### ஏழைகள் கைவிட்டனர்

ஆனால் இந்த வருஷத்தில் இந்நிலை மாறிவிட்டது. ஒரு அந்தர் வெங்காயம் எடுக்கவேண்டுமானால் 80 ரூபா சங்கத்திற்குக் கட்ட வேண்டி வந்தது. வெங்காயம் பயி[ரிட்]ட பின 40, 35 ரூ[பா]வுக்குச் சங்கத்தார் தரு[...]

கங்களிலிருந்து 40, 45 ரூபாவுக்கு, ஒரு அந்தர் வெங்காயத்தைக் கமக்காரர் எடுக்கின்றார்கள்.

இரண்டு மாசத்திற்கு முன், கமக்காரருக்கு, தங்களுக்குச் சங்கத்தின் மூலம் வெங்காயம் கிடைக்குமோ வென்ற சந்தேகம் இருந்தது. ஆனபடியால் வசதியுள்ளவர்கள் ஒரு அந்தர் வெங்காயம் 120-130 ரூபாவாக வாங்கிப் பயிரிட்டார்கள். ஏழைகள் வெங்காயச் செய்கையைப்பற்றிச் சிந்திக்கவில்லை.

பின்பு விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களுக்கு வெங்காயம் வந்தபோதிலும், ஒரு அந்தர் வெங்காயத்திற்கு 80 ரூபா முற்பணம் கட்டவேண்டியிருந்தபடியால், எத்தனையோ ஏழைக் கமக்காரர்கள் விதை வெங்காயம் எடுக்காது விட்டுவிட்டார்கள். இதனால் இந்த வருஷம் யாழ்ப்பாணத்தில் வெங்காயச் செய்கை குறைந்துவிட்டது ஏழைகள் வெங்காயச் செய்கையை முற்றாகக் கைவிட்டு விட்டார்கள்.

### பாடுபட்டதற்கு பலன் கிடையாது

ஒரு அந்தர் வெங்காயம் பயிரிட்டுப் பிரயோசனம் எடுக்க குறைந்தபட்சம் 40 ரூபா செலவாகும் ஒரு அந்தர் வெங்காயத்திற்கு சாதாரணமாக 4 அந்தர் வெங்காயம் விளையும

ஒரு அந்தர் வெங்காயத்தை வெளி வியாபாரிகளிடம் வாங்கிப் பயிரிட்டவருக்கு அதைக் கிண்டியெடுக்கிற வரையில் 170 [...]

சங்கத்தில் அந்தர் 45 ரூபாவாக வாங்கிப்பயிரிட்டவருக்கு பிரயோசனம் எடுக்கிறவரையில் ஏறக்குறைய 85 ரூபா முடியும்.

இப்பொழுது உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளால் - விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களுக்கு; ஒரு அந்தர் வெங்காயத்தை, ஏறக்குறைய 20 ரூபா 16 சதத்திற்கும், அதிலிருந்து சிறிது விலை கூட்டியும், கமக்காரரிடமிருந்து எடுக்கும்படி அறிவித்தல் வந்திருக்கின்றது. இதனால் ஏற்படும் பலாபலன்கள் பின்வருமாறு:-

சங்கங்களில் எடுத்து வெங்காயம் பயிரிட்டவருக்கு, ஒரு அந்தர் வெங்காயத்தைப் பயிரிட்டுப் பிரயோசனம் எடுக்கிறவரையில் முடிவு 85 ரூபா சாதாரண விளைவு ஏறக்குறைய 4 அந்தர். அப்பொழுது அரசாங்கத்தாரால் குறிக்கப்பட்டிருக்கிற விலையின் படி ஒரு கமக்காரன் (வி உ வி. சங்கத்தில் விதைவெங்காயம் எடுத்துப் பயிரிட்டவர்) தனக்கு விளையக் கூடிய வெங்காயத்தை விற்றுதான் செலவு செய்த பணத்தை மாத்திரம் பெற்றுக் கொள்ளலாம். அவனது பிரயாசத்துக்குப் பலன் எதுவும் இல்லை.

### கமக்காரரின் திண்டாட்டம்

சென்ற வருஷங்களில் ஒரு ரூத்தல் மிளகாய் ஏறக்குறைய 1 ரூபா 30 சதம் தொடங்கி 1 ரூபா 50 சதம் வரையில் விலைப்பட்டது. இந்த வருஷத்தல் ஒரு ரூத்தல் மிளகாய் ஏறக்குறைய 80 சதம் வரையில் விலைப்படுகின்றது வெங்காயச் செய்கையினால் நஷ்டப்படும் கமக்காரன், தனது [...]

றுச்சமாளித்துக் கொள்ளலாமென்றால் அதுவும் முடியாமல் இருக்கின்றது. குறைந்த விலைக்கு மிளகாயை விற்க விருப்பமில்லாமல் கமக்காரன் மிளகாயை வீட்டில் கட்டி வைத்துக் கொண்டிருக்கின்றான்

புகையிலையின் விலையும் மிகக் குறைவாக இருக்கின்றது. அதனால் புகையிலையையும் விற்க விருப்பமில்லாமல், கட்டிவைத்துக் காத்துக்கொண்டு, காசுக்குத் திண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள்.

நமது நாட்டில் வெங்காயம் மிளகாய்ச்செய்கைகளை விருத்தியாக்க வேண்டுமானால், அரசாங்கம் இந்தியாவிலிருந்து மிளகாயையும் வெங்காயத்தையும் இறக்குமதி செய்யாமல் விடவேண்டும். அல்லது இறக்குமதி செய்யப்படும் மிளகாயையும் வெங்காயத்தையும், அரசாங்கம் வாங்கி ஒரு குறிக்கப்பட்ட விலைக்கு விற்கவேண்டும். இந்த விஷயத்தில் யு. என். பி. தமிழ்க காங்கிரஸ் கூட்டாட்சி தலையிடாமல் இருப்பது தான் விநோதமாக விருக்கிறது. இது சம்பந்தமாக அரசாங்கத்தின் நடத்தை, யாழ்ப்பாணக் கமக்காரருக்கு எதிராக அரசாங்கம் செய்யும் சதியோ என்று கூட மக்களை எண்ணச் செய்கின்றது. நம் நாட்டில் வெங்காயம் மிளகாய் முதலியவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும் யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரத்தைப் பாதுகாக்கவும் அரசாங்கத்தார் ஆவன செயயவேண்டுட். அதை விட்டு யாழ்ப்பாணத்தவர்கள் தமிழர்கள் தானே; அவர்கள் எக்கேடு கெட்டாலென்ன என்றிருப்பது அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் அழகல்ல.

—வி. சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'உரிமைகளைப் பறித்தது ஈவிரக்கமற்றது'

## எட்டியாந்தோட்டையில் திரு. நாயர் பேச்சு

"இலங்கைவாழ் இந்தியர்களின் உரிமைகளை அரசாங்கம் ஈவிரக்கமின்றி பறித்து நம்மை மிருகங்களிலும் கேவலமான நிலைமையில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளன. நம் உரிமைகளை அதுவும் பிறப்புரிமையாகிய ஓட்டுரிமையையும் பிரஜாஉரிமையையும் கொடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்கும் முகமாக ஒரு மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை இலங்கை இந்திய காங்கிரஸ் தலைமையில் நடத்தி வருகிறோம் இப்போராட்டம் மனித உரிமையைக் கேட்கும் போராட்டம். இந்நாட்டின் சிற்பிகளாகிய-தொழிலாளர்களாகிய-நம் உரிமையை இவ்வரசாங்கம் பறித்துள்ளதுமகா கொடுமையான செயலாகும்" இவ்வாறு இலங்கை இந்திய காங்கிரஸ் கௌரவ கூட்டுக் காரியதரிசியும், கேகாலை, கழனிவேலி ஜில்லாக் கமிட்டிகளின் தலைவருமான திரு கே ஜி. எஸ். நாயர் பேசுகையில் கூறினார்

இலங்கை இந்திய காங்கிரஸ் கழனிவேலி, கேகாலை ஜில்லா கமிட்டிகளின் சார்பாக கடந்த 29-6-52ல் எட்டியாந்தோட்டை இம்பீரியல் படமாளிகையில் தோட்ட சபா தலைவர்கள், காரியதரிசிகள் பொக்கிஷதார்கள் மாதர் சங்க தலைவிகள் தொண்டர்கள் முதலியோர் அடங்கிய ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் திரு கே ஜி. எஸ். நாயர் தலைமையில நடைபெறறது. இலங்கை இந்திய காஙகிரஸ் மாஜி தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் திருவாளர்கள் எம். பி. வீரையா, ஏ. பாலகிருஷ்ணன் வி. அழகக்கன், கே. ஆறுமுகம், விலியம்சிஙகோ ஆகியோர்கள் கூட்டததில் பேசினார்கள்.

தறசமயம் இலங்கை அரசாங்கததினரால் கொணடு வரப்படும தேசிய இன்ஸூரன்ஸ் திட்டத்தில் தோட்டத் தொழிலாளரை சோக்காமல ஒதுக்கி வைததிருபபதறகு வருததம் தெரியததும், நாட்டின் முதுகெலும்பாகிய தோட்டத் தொழிலாளர்களை அத்திட்டததில அவசியம் சோககு வேணடுமென கேட்டுககொள்ளும ஒரு தீர்மானம் கூட்டத்தில் நிறைவேறியது.

### தெல்தோட்டம் கமிட்டி தெரிவு

இலஙகை இந்திய காங்கிரஸ் கலஹா ஜில்லா கமிட்டியின் ஆதரவில் கடந்த 29-6-52ல தெல்தோட்டம் குருப கமிட்டி தோதல் கூட்டம் ஜில்லா தலைவர் திரு அ. பெ. வடிவேல் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் காரிய தரிசி திரு எஸ். எம் சுப்பையா மூவர்ண கொடியை ஏற்றுவித்து பேசுகையில் ஜனநாயகத்தின் பேரால் இலங்கை அரசாங்கம் எவ்வாறு மனித உரிமைகளை பறிமுதல் செய்துள்ளனர் என்பதை விவரித்தார்.

அடுத்தபடியாக திரு என். எம். பழனிச்சாமி பேசினார். பின்னர் தோட்டக் கமிட்டிக்கு கீழ்கண்ட உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தெல்தோட்டம்: தலைவர்: எம். கே முனியாண்டி கூட்டுக் காரியதரிசிகள்; என். எஸ். வீணைதீர்த்தான், ஆர். இராமன். பொக்கிஷதார்: ஆர். எஸ். மூக்கையா (கமிட்டி மெம்பர்கள் 14 பேர்கள்)

கள்ளந்தன்னை பணியகணக்கு; தலைவர் ஓ. காளிமுத்து காரியதரிசி: வ. ப நாட்டுராயன் பொக்கிஷதார்: வ. நடேசன் கங்காணி (கமிட்டி மெம்பர்கள் 10 பேர்கள்)

### மாதர் காங்கிரஸ்

இலஙகை இந்திய மாதர் காங்கிரஸ் பன்விலை ஜில்லா கிளையின் பொதுக் கூட்டமொன்று ஜில்லா உபதலைவி ஸ்ரீமதி டி. பார்வதியம்மாள் தலைமையில் நடைபெற்றது. கூட்டததிற்கு ஏராளமான பெண்கள் விஜயம் செய்திருந்தனர். பறிமுதலான இலஙகை இந்தியரின் அரசியல் உரிமைகளை மீண்டுமபெறுவதற்கு தொடர்ந்து போராட வேண்டிய தின் அவசியத்தை தலைவர் தமது முகவுரைவில் சுருக்கமாக கூறினார்.

ஸ்ரீமதி ஏ. வி. எஸ். பகவதியம்மாள் இலஙகை இந்திய காங்கிரஸ் தோன்றி கடந்த பதினொரு வருடஙகளாக செய்துவரும் அரிய தொண்டுகளையும், இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் அரசினர் இந்திய மக்களுககு செய்துவரும் அநீதிகளையும தெளிவாக எடுத்துக்கூறினார்.

பின்னர் இலங்கை இந்தியர் பிரச்னையை சுமுகமான முறையில்தீர்க்கும்படிபிரதமரைக கேட்டுககொள்ளும் தீர்மானமொன்று கூட்டத்தில் நிறைவேறியது.

### நாளியாவத்தை தோட்டக் கமிட்டி

கலஹாவைச் சேர்நத நாளியாவததை தோட்டப் பாடசாலையில கலஹா ஜில்லா இ. இ. தொழிலாளர் கமிட்டியின் ஆதரவில் ஒரு பொதுககூட்டம் ஜில்லா தலைவர் திரு பி. வடிவேல் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் காரிய தரிசி திரு எஸ். எம். சுப்பையா அவர்கள் கூட்டத்திற்கு விஜயம் செய்து சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் கீழ்க்கண்டவர்கள் தோட்டக் கமிட்டி உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: க. வயிரவன், உபதலைவர்: ம. வீ. வெங்கடாசலம், கூட்டுக் காரிய தரிசிகள்: ச. கருப்பையா, ந. கோபால். தனாதிகாரி: து. ரெங்கசாமி (கமிட்டி மெம்பர்கள் 7 பேர்கள்)

### டன்ஸிலின் தோட்ட கமிட்டி

பூண்டுலோயாவைச் சேர்ந்த டன்ஸிலின் பாக்டரி டிவிஷன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கமிட்டி தேர்தல் கூட்டம் சென்ற 6-7-52ல் ஜில்லா பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

நடப்பு வருட தோட்டக் கமிட்டி உத்தியோகஸ்தர்களாக கீழ்க்கண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: வி. ஐ. அண்ணாமலை, உபதலைவர்; ஐ வீருக்குட்டி, காரியதரிசி: பி. ஜி. ஜோன், உப காரியதரிசி: கே. அமராபதி, கௌரவ பொக்கிஷதார்: டி. ஏ. வெங்கடாசலம் ஏட் கங்காணி (கமிட்டி மெம்பர்கள் 22, தொண்டர்கள் 6 பேர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.)

---

### சேர் ஒலிவரின்............

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுண்டு பசுபோல நிற்குமாம்.

பசுக்களின் ரஸிகத்தன்மையை நன்கு பயன்படுத்திக்கொள்ள நியுஸிலாந்து பால் பண்ணைகளின் சொந்தக்காரர்கள் முன்வந்திருக்கிறார்கள். கறவைப் பசுக்களுககென தனி நிகழ்ச்சியொன்றை ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் சேர்க்குமாறு அவர்கள் 'ஒலிபரப்பு' மந்திரியிடம் ஒரு கோரிக்கை சமர்ப்பித்திருக்கின்றனர்.

ரேடியோ சிலோன் ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் அனைத்தும் இன்னும் 10 தினஙகளில சீர்திருத்தி அமைக்கப்படுமென்ற செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது.

இலங்கையில் 'கறவைப் பசு' சொந்தக்காரர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுததிக்கொணடு மந்திரியாரைப் பேட்டிகண்டு தங்கள் பசுக்களுககென தனி நிகழ்ச்சியொன்று சேர்ககுமாறு வற்புறுத்துவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிகழ்ச்சி அதிகாலையில் ஒலிபரப்பபடவேண்டுமெனபதை விளககிக கூற அவர்கள் மறந்துவிடமாட்டார்களென்றும் நம்பப்படுகிறது. இதே மாதிரி நாய், கோழி முதலியவைகளின் சொந்தக்காரர்கள் தங்களின் "சததுகளுககும்" தனி நிகழ்ச்சி வேணடுமென்று வறபுறுத்த முன் வராவிட்டால், கறவைப் பசுககளுககென தனி ஒரு நிகழ்ச்சியை ஒலிபரபபுவதில் மந்திரியாருக்கு ஆட்சேபணை இருக்க முடியாதென்று கருதப்படுகிறது.

---

# கழகச் செய்திகள்

### பாரதிகான நாடக சபா

பாரதிகான நாடக சபாவின் அமைப்புக் குழு கூட்டம் கடந்த 6-7-52ல் கொட்டாஞ்சேனை பான்சல ரோடு 130 இலக்க இல்லத்தில் கூடிற்று. திரு ஏ. எஸ் தட்சணாமூர்த்தி தலைமை வகித்தார். தலைவர் தம் முன்னுரையில் "நாடகக் கலையும் நாமும்" என்னும் பொருள்பற்றி பேசினார்.

நாடக சபாவிற்கு கீழ்கண்ட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: வி. கே. செல்லப்பா, செயலாளர்: ஏ. எஸ். தட்சணாமூர்த்தி, இணை செயலாளர்: எஸ். பி சுப்பையா, பொருளாளர்: எஸ். டி. இருதயம் மேற்படி சபாவின் "அஸ்வேந்திரன் வெற்றி" என்னும் நாடகத்தை அதிசீக்கிரத்தில் நடத்திக் காட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### நேரு இளைஞர் சங்கம்

வடக்கன்குளம் நேரு இளைஞர் சங்கத்தின் சார்பாக 6-7-52ல் இரவு 6-30 மணிக்கு சங்க கட்டிடத்தில் திரு எம். ராஜாராம் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. "சங்க முன்னேற்றம்" "ஒற்றுமை" என்னும் பொருள் பற்றி திருவாளர்கள் எஸ். ஏ. தேவா, மாஸ்டர் சிரில், எம். தேவசகாயம், ஏ. எம். ஜே. தாஸ். தே, சேவியர் முதலியோர் பேசினார்கள். தலைவர் முடிவுரையில் ஒரு சிலர் நடத்திவரும் நாஸ்திக பிரச்சாரங்களைக் கண்டித்தும், எல்லோரும் கடவுள் பக்தியுள்ளவர்களாய் வாழ வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

### முஸ்லிம் சேவா சங்கம்

வெலிகாமம் முஸ்லிம் சேவா சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் கடந்த 6-7-52ல் கூடியது. தலைவர் ஜனாப் ஏ ஆர். எம் ஷாகுல் ஹமீத் தலைமை வகிததார். "நோன்புப் பெருநாள் சம்பந்தமாய் ஜனாப் ஏ ஆர் எம் ஸகரியா ஆலிம் கையாண்ட கொள்கையைக் கண்டித்தும் அவர் இலங்கையை அனுசரிக்காமலும் ஆலிம்களை துஷ்பிரயோகம் செய்தும் 24-ம் திகதி பெருநாள் எடுக்காது 25ம திகதி பெருநாள எடுத்தமைக்கு ஒரு பொதுச்சபை மூலம் விளககம் கோர வேண்டுமென்னும்" தலைவரால் கொணடுவரபபட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது. மற்றும் சில தீர்மானஙகளுடன் கூட்டம நிறைவேறியது.

### பழைய மாணவர் சங்கம்

மட்டககளப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை பழைய மாணவர் சங்கததின் பொதுக கூட்டமொனறு 28-6-52ல் கலாசாலை மணடபத்தில் அதிபர் திரு சி. கந்தசாமி தலைமையில்நடைபெறறது.

இககூட்டத்தில் நான்கு பிரேரணைகள் நிறைவேறறப்பட்டது. பின்னர் புது வருடத்திற்கு கடமையாற்ற கீழ்கண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்; திரு வி. குழந்தைவேல், உபதலைவர்: பண்டிதர் வீ. ரீ செல்லதுரை, இணைச் செயலாளர்கள்: திரு மு. கணபதிப்பிள்ளை, செல்வி டி. தவமணி, துணைச் செயலாளர்: திரு இ. விநயகமூர்த்தி, தனாதிகாரி: திரு கே. வேல்முருகு.

### திருவள்ளுவர் நாடக சபா

திருவள்ளுவர் நாடக சபாவின் மாதாந்திரப் பொதுக் கூட்டம் கடந்த 5-7-52ல் கொள்ளுப்பிட்டியில் திரு ஆர். எஸ். பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நாடகங்களுக்கு தமாஷா வரி விதிப்பதை ரத்துச் செய்ய வேண்டுமென்றும், இது விஷயமாக இதர நாடக கழகங்களுடன் கலந்து பேசி நகர மேயரை பேட்டிகாண ஒரு தூது கோஷ்டியை அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சபாவின் எதிர்கால சேவை, கலையுலகில் உன்னத ஸ்தானம் வகிக்க வேண்டியதின் அவசியத்திற்கான மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேறியது.

### மாணிக்க வாசகர் குருபூசை

மறவன்புலோ சகல கலாவல்லி வித்தியாசாலை மண்டபத்தில் கடந்த 27-6-52ல் திரு க. வேலுப்பிள்ளை தலைமையில் ஒரு பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது.


ஆசிரியர் திரு ஏ. பொன்னையா, ஆசிரியர் திரு வே. இரத்தினம், ஆசிரியர் தி. சின்னத்தம்பி, தலைமை ஆசிரியர் திரு நா. பொன்னம்பலம் ஆகியோர்கள் முறையே மாணிக்க வாசகரின் ஜீவிய சரித்திரம், திருவாசகத்தில் ஒரு வாசகம், சமூகசேவை, சமய வளர்ச்சி என்னும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

---

### புதிய மார்க்ஸீய கட்சி

புரட்சிகரமான சோஷலிஸ்ட்கட்சி, புரட்சிகரமான கம்யுனிஸ்ட் கட்சி, தொழிலாளர்-விவசாயிகள் கட்சி, போர்வட்பிளாக், மஜ்தூர் கம்யுனிஸ்ட் கட்சி (ட்ராட்ஸ்கிஸ்ட்) ஆகிய கட்சிகள் ஐக்கியப்பட்டு தனி ஒரு மார்க்ஸீய கட்சி நிறுவும் பொருட்டு பம்பாயில் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன. புரட்சிகரமான சோஷலிஸ்ட்கட்சித் தலைவர்களும், டில்லிமக்கள் சபைப் பிரதிநிதிகளுமான ஸ்ரீகண்டன் நாயரும், திரு சௌத்திரியும் பிரஸ்தாபக கட்சியை ஸ்தாபிக்க முன்னணியில் நின்று பாடுபடுகின்றனர் கம்யுனிஸ்ட்கட்சியும், சோஷலிஸ்ட் கட்சியும் இக் கூட்டணியின் சேர்த்துக் கொளளப்படமாட்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




## "ஒரு நாட்டின் இரு கண்கள்!"

உலகில் உயிருள்ள சகல ஜீவன்களுக்கும் இரு கண்களுண்டு என்பதை போன்று ஒரு நாட்டிற்கும் இரு முக்கியமான கண்களுண்டு. அந்தக் கண்களில்லாத நாடுகள் வறுமையில் வாடி மடிந்துவிடும். எந்தக் கண்களென்று கேட்கின்றீர்களா? இதோ! அக்கண்கள் "உழுவார் உலகத்தார்க்குஆணி அஃதாற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து" என வள்ளுவர் கூறியுள்ளார் உழவுசெய்ய முடியாமல் மற்ற தொழிலைச் செய்கின்றவர் எல்லாரையும் தாங்குவதால் உழவு செய்கின்றவர் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர். அதனாலேயே தான் அவர்கள் ஒரு நாட்டிற்கு மட்டுமின்றி முழு உலகிற்குமே கண்கள் போன்றவராவார் மேலும் உழவு தொழிலைவிட சிறந்த தொழில் உலகில் கிடையாதெனக் கூறலாம். மனித வாழ்க்கைக்கு மிக முக்கியமாக வேண்டியது உணவு, உடை இவைகளே. இதையறிந்த ஒரு அறிஞர் கூறினர்: "செய்யும் தொழிலெல்லாம் சீ தூக்கிப்பார்க்கின் நெய்யும் தொழிலுக்கீடுண்டோ கண்டீர்? என பாடியிருக்கின்றார். உழவர்கள் நாட்டின் வறுமை நிலையையொழித்து வாழ்வுக்கு வேண்டிய நல்ல உணவைத் தருகின்றார்கள். நெசவாளிகளோ உயிரினும் பெரிதென மதிக்கும் மானத்தைக் காப்பாற்றி—நாலுபேர் மதியில நல மதிப்புடன் வாழ்வதற்கு உதவுகின்றார்கள் இவ்விருவர்க்கத்தினரும் "ஒரு நாட்டின் இரு கண்கள்" என்று போற்றப்படுதல் வேண்டும். அதுவன்றி இந்த நாட்டிலேயே தன்னுயிரையும் பாராது உழைத்து இலங்கையின் பெருமையை உலகிற்கு உணர்த்திய உண்மைத் தொழிலாளர்கட்கு உரிமை மறுக்கப்படுகின்றதே அவ்வழு நிலையொழிந்து அவர்களை நாட்டின் கண்களாக மதித்து நடக்கும் நாடு எதோ அந்த நாடே முன்னேற்றமடையும்

—"இக்பால் தாஸன்"

---

## 'புகழ்'

சிறுவர்களே நாம் தோன்றினால் புகழோடு தோன்ற வேண்டும். இல்லாவிடில் நாம் தோன்றாமலிருப்பதே நல்லது இக கருத்தினை திருவள்ளுவர் தமது 'குறளில்' கூறியிருக்கின்றார்.

சிலர் தமது வீரத்தைக் காட்டித்தும், சிலர் ஒழுக்கமுள்ளவராய் இருந்தும் மற்றும் சிலர் தர்மம் செய்து தயாசீலராய் புகழ் படுகிறார்கள்.

பாலர்களே நாம் முயற்சி செய்து நமக்காகக் காத்திருக்கும் புகழைப் பெறுவோமாக

"தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றா
மை நன்று" "வள்ளுவர்"

"பஞ்சாத"
மகாதேவா.

## குறைகூறாதீர்!

பிறரைக்குறைகூறுவதன் மூலம் அவர்களைத் திருத்திவிடலாமென்று கருதினால் அது வீண் வேலையே "பிறரைக் குறைகூறுவது முட்டாள்தனமென்று நான் முப்பது ஆண்டுகளுக்கு முன் கற்றுக்கொண்டேன் என் குறைகளை நிவர்த்தி செய்யவே எனக்கு கஷ்டமாயிருக்கும்போது இறைவன் பிறருக்கு சரியான அறிவைக் கொடுக்கவில்லையே என்று நான் வருந்த நேரமேது?' என்கிறார் வானமேக்கர் என்ற பெரியார் நாம் பிறரைக் குறைகூறுவது வீண் வேலையாகும். நமது பொன்னான நேரத்தை பல மணிநேரம் வீணாக்குகிறோம். ஏனெனில் குறைகூறப்பட்டவன் இயற்கையாகவே தான் செய்தது சரி என்றே வாதாட முனைவான். அது குறைகூறப்பட்டவனுடைய தன் மானத்தைத் தாக்குகிறது

எம். முகமது மக்கீன்
86 ஹல்ஸ்டோப்
கொழும்பு.

---

## கணித நிபுணர் யூக்ளிட

உலகமே வியக்கும் பெருங்கவி ஹோமர், தத்துவ நூல்களில் தலைசிறந்த பிளாட்டோ, விஞ்ஞானத்தின் தந்தையென அழைக்கப்படும் மேதை அரிஸ்டோட்டல் ஆகியோர்களை இவ் அவனிக்குத் தந்த கிரேக்க நாடுதான் கணிதத்தில் நிபுணரான யூக்ளிட்டையும் இவ் அவனிக்கு அளித்தது.

இவர் கி. மு. 330ல் பிறந்தார் தத்துவ நூல்களில் தலைசிறந்த பிளாட்டோவின் கீழிருந்து படித்த மாணவர்களில் இவரும் ஒருவராகும். அரிஸ்டோட்டலும், ஆர்ச்சிமிடேசும் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்தவர் இக்கணித மேதை

ஏறக்குறைய 2000 வருடங்களாகியும் இன்னும் அவர் எழுதிய "ஜோமெட்ரி" புத்தகங்கள் உலகில் மாற்றப்படவில்லை.

இவர் எகிப்திலுள்ள அலெக்ஸண்டிரியாவில் முதல் அட்சர கணிதவித்வானாக 30 வருடங்கள் இருந்து பிறகும் தான் இறக்கும் வரை அதே ஸ்தானத்திலிருந்து தொண்டாற்றினார்.

கிரேக்க நாடு உலகுக்கு அளித்த கணித மேதை கி. மு. 275ல் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவரது நூல்களும், புகழும் என்றும் நீடூழி வாழ்க!

—அருணைசலன்
வல்வெட்டித்துறை
மெதடிஸ்ட் மத்தியகல்லூரி
மட்டக்களப்பு

## அருமை மாணவர்களே

இவ்வாரத்திலிருந்து எங்கள் உலகம் மாணவர் மன்றமாக மாறியிருக்கிறது இப்படி ஏன் மாறிற்று என்று நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள் இதோசொல்கிறேன்

இதுகாலவரை எங்கள் உலகம் ஒரு பாலர் பகுதியாக இருந்து வந்தது. இப்போது நீங்கள் எல்லாரும் பாலப் பருவத்தைத் தாண்டி மாணவராய்விட்டீர்கள். மாணவர் என்ற முறையில் புதுப்புது விஷயங்களை நீங்கள் படிக்கவும் எழுதவும் வேண்டியிருக்கிறது.

அத்தகைய உயர்தர விஷயங்களுக்கு இடந் தருவதற்காகவே இப்பகுதியையும் சற்று உயர்த்த வேண்டியதாயிற்று.

இனி வரும் வாரங்களில் பற்பல அரிய விஷயங்களை நீங்கள் இம்மன்றத்தில் படிப்பீர்கள். அதுபோலவே நீங்களும் நல்ல விஷயங்களை எழுதி இம்மன்றத்தை ஒரு அறிவுப் பகுதியாக்க வேண்டுமென ஆசிக்கிறேன்.

சுதந்திர மாமா

## சுகசீவியம்

பூமியில் பிறந்த நாம் சுகமாக வாழவேண்டுமாயின் சில முக்கிய விதிகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

காலையிலே எழுந்தவுடன் சுத்தமான தண்ணீர் அருந்துவது நன்று காலையில் குளிக்க வேண்டும் சுத்தமான காற்றைச் சுவாசிக்க வேண்டும் பதமான உணவு சாப்பிடவேண்டும் சாப்பாட்டை நன்கு மென்று உண்ணவேண்டும்.

சாப்பாட்டை திறந்து வைக்கக் கூடாது. வீடு வாசல்களை சுத்தமாக்க வேண்டும். வீட்டில் கிருமி நாசினி பாவிக்கவேண்டும் நகம், தலை, பற்கள், உடுப்பு முதலியவற்றைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். நல்ல வெளிச்சத்தில் படிக்கவேண்டும்


இவைகளை கவனித்தால் நாம் சுகதேசிகளாக வசிக்கலாம். ஆதலால் பாலர்களாகிய நாம் இவைகளை கவனித்து நற்சுகத்தை பெறுவோமாக

த நடனசிகாமணி
இந்துக் கல்லூரி
திருகோணமலை

## மாணவர் கடமை

நாம் மாணவர்கள். நம்மால் என்ன செய்ய முடியும்? என்ற வீண் ஏக்கங்கள் நமக்கு வேண்டாம். இக்கால மாணவர்தான் வருங்கால பெருமக்கள். நம்முடைய கையிலேதான் உலகத்தின் கதிபோட்சம் இருக்கின்றது நாம்தான் வருங்கால மக்களுக்கு வழிகாட்ட வேண்டும். நம்முடைய இளமைப் பருவமே வருங்கால வாழ்வுக்கு எம்மைத் தயார் செய்யும் கலாசாலை அக்கலாசாலை மூடப்படுவதற்குமுன் நாம் சீக்கிரம் பாடங்களைக் கற்றுத் தேறவேண்டும். "இளமையிற் கல்" என்பது தமிழ் மூதாட்டியின் வாக்கு கல் என்றால் பாடசாலையில் மாத்திரம் படிப்பதில்லை. எல்லாவற்றையும் கற்க வேண்டும். நாம் இளமைப் பருவத்தில் தன்னம்பிக்கை, ஊக்கம், தைரியம் இவை தான் நம்மை வருங்கால வெற்றி வீரராக்கும். நாம் சிறுவயதில் பொறாமை, கோபம் முதலிய கெட்ட குணங்களை நம்மைத் தோல்வியில் தள்ளிவிடும். நாம் எல்லாரையும் கனம்பண்ண வேண்டும்.

செ. தியாகராசா
7ம் வகுப்பு
அரசினர் கல்லூரி
மட்டக்களப்பு



100க்குமேற்பட்ட பள்ளிக்கூடமாணவர்கூட்டங்கள் ஒரு விமான தாங்கிக் கப்பலுக்குச் சென்று இங்கிலீஷ் கால்வாயில் நடைபெற்ற கப்பற் படை பயிற்சியைக் கண்டுகளித்தனர்... [illegible] ...தளத்தில் நிற்கின்ற அவர்கள் ஒரு ... [illegible] ... அருமையைக் கவனித்துக் கொண்டிருப்பதைப் படத்தில் காண்க.

## கோள் சொல்லாதே

பாய் என்ற குசினிக்காரன் பலவருட காலமாக ஒரு கடையில் கடமையாற்றிக் கொண்டுவந்தான். இவன் பிறரைப்பற்றி கோள் சொல்லி வந்ததினால் இவன்மீது அக்கடைக்கார முதலாளி மிகவும் அன்பாயிருந்தார். இந்த முதலாளி இறந்ததும் இவரது இனத்தவர் ஒருவர் இக்கடைக்கு முதலாளியானார் இம்முதலாளி மிகவும் முன்னேற்றவாதி ஒருநாள் பாய் ஒரு நல்ல பொடியனைப்பற்றி மிகவும் கேவலமாகக் கோள் சொன்னான். இவ்விஷயத்தையிட்டு இம் முன்னேற்ற முதலாளி விசாரணை செய்து பாயை குற்றவாளியாகக் கண்டு இனிமேல் கோள் சொல்லாதே என்று தும்புக்கட்டையால் அடித்தார் பாய் தப்பினேன் பிழைத்தேனென்று ஓட்டம் பிடித்தான்.

கே கனகசூரியம்
கனிஸ்ட ஆங்கிலபாடசாலை
ஏரூவூர், செங்கலடி

---

## உங்களுக்குத் தெரியுமா?

1. உலகத்தில் சுமார் எத்தனைப் பாஷைகள் வழங்கி வருகின்றன?
2. காந்தக் கோட்டை இலங்கையில் எவ்விடத்திலிருந்தது?
3. பறக்கும் மிருகம் என்று எப் பிராணியைச் சொல்லலாம்?
4. எம் மரத்தின் நிழல் தேக சுகத்துக்கு ஏற்றது?

### விடைகள்

1. 1750 பாஷைகள்.
2. மன்னார்.
3. வெளவால்.
4. வேப்பமரத்தின் நிழல்.

எம். எஸ். எம் ஜவுபர்
வெலிதர
பலப்பிட்டி

---

## சுற்றுப்பிரயாணமும் பயனும்

மக்களின் அறிவு வளர்வதற்கு ஏதுவான காரணங்களில் முதன்மை இடம் வகிப்பது சுற்றுப்பிரயாணமாகும். எவ்வளவு குறுகிய மனமும் சுற்றுப்பிரயாணம் செய்வதால் விரிகின்றது. பட்டணத்தினிலும், பட்டினியிலும், அழகினிலும் செருக்கடையும் ஒருவர் சுற்றுப் பிரயாணம் செய்து வருவாரேயானால் இலட்சாதிபதிகளையும், பட்டதாரிகளையும், அழகு ராணிகளையும் கண்டு அவர்கள்முன் நாம் எவ்வளவென்று நினைத்து தம் செருக்கொழிவார். ஆனால் பாடசாலையில் பயிலும் மாணவர்களுக்கு சுற்றுப் பிரயாணம் இன்றியமையாததாகும் சாதவேற்றுமை, மதவேற்றுமை பாராட்டுவோன் ஒருவன் ஒருமுறை சுற்றுப்பிரயாணம் செய்வானேயாகில "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பான்மையாக வந்துவிடுவான்.

அ நா வில்லி இராசமலர்
4ம் கட்டை
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி கங்கை யமுனை சந்திக்கும் சங்கமம்

## திரிவேணியில் தம்பதிகள் நீராடும் வைபவம்

## பிச்சைக்காரர்கள் கங்கா புத்திரர்களாம்

கங்கையில் யமுனை சங்கமமாகும் இடத்தில் சரஸ்வதியும் அவர்களை அணைத்துத் தழுவுகிறாள். வேத நூல்களில் புனிதமான மாதா என்று கூறப்படும் சரஸ்வதி பூமிக்கடியிலும் நீரோட்டமுள்ள நதியாகக் கருதப்படுகிறது. இம்மூன்று நதிகளும் சந்திக்குமிடம் "திரிவேணி" என்று அழைக்கப்படுகிறது.

ஒரு காலத்தில் சரஸ்வதி வேகமாகப் பாயும், விரிந்த பரப்புள்ளவளாகக் காட்சியளித்தாளென்றும், அவளது இரு கரைகளிலும் இந்து நாகரீகம் செழிப்புற வோங்கி வளர்ச்சியடைந்ததென்றும் வேதாந்த ஆராய்ச்சி நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். பின்னர் இயற்கைப் புரட்சியின் விளைவாக ராஜபுத்தான பாலைவனப் பிசாசுகள் அவளை விழுங்கிவிட்டன. நதி தீரத்திலுள்ள சுபீட்சம் நிறைந்த பசுமையான சோலைகள் மழையின்மையின் விளைவாக பாலைவனங்களாக மாறிவிட்டன.

* * *

மூன்று பின்னல்களுள்ள ஒரு யுவதியின் கவர்ச்சி மிகுந்த கருங்கூந்தலைப் போன்று காட்சியளிக்கும் "திரிவேணி" மூன்று புனித நதிகளின் சங்கமமாகும். வெண்பட்டாடை உடுத்திய வீரமிக்க கங்கையும், சக்திவாய்ந்த நீலவர்ண யமுனையும் இங்கு சந்திப்பது கண்கொள்ளாக்காட்சியாகும். ஐக்கியமடைந்தகங்கா நதி தீரத்திலுள்ள காசி க்ஷேத்திரத்தில் சுவாமி விஸ்வேஸ்வரன் எழுந்தருளியிருக்கிறார். யமுனை நதிக் கரையில் கிருஷ்ண பரமாத்மா வீற்றிருக்கின்றார்.

* * *

திரிவேணி சங்கமத்தில் தம்பதிகள் மங்களஸ்நானம் செய்யும் வழக்கம் இன்னும் இருக்கின்றது. திரிவேணியில் மனைவி கடவுளைப் போல கணவனை வலம் வந்து, தனது குற்றங்குறைகளை மன்னித்தருளுமாறு நாயகனை வேண்டுவாள். (மனைவி தாழ்ந்தவளென்பதோ கணவன் உயர்ந்தவனென்பதோ இதன் அர்த்தமல்ல) அப்பொழுது கணவன் அவளது கூந்தலில் ஒரு மலரை அணிவித்து, அதனின்று ஒரு சில மயிர்களைக் கொய்து சுருளாக்கி நதிகளில் வீசுவான். அதன் பிறகுதான் இருவரும் நீராடுவார்கள்.

* * *

ஹரித்துவாரத்தில் கங்கை சிங்கம்போல வேகமாகப் பாய்கிறாள் ஆனால் திரிவேணி பிரயாகையில் மிக சாந்தமாக மெதுவாக ஓடுகிறாள். அமைதியான கங்கை அமைதியான யமுனையை ஆலிங்கனம் செய்யும் திருவேணியில் நீரோட்டம் அமைதியாகவே இருக்கின்றது. இங்கு நீராட வருகின்றவர்கள் புனித நீரின் மீது புஷ்பங்களைத் தூவி ஸ்நானம் செய்கின்றார்கள். நதிக்கரையிலிருந்து அவர்களிடம் "தர்மம்" வாங்கும் பிச்சைக்காரர்கள் கங்கா புத்திரர்கள் (கங்கைத் தாயின் குழந்தைகள்) என்று அழைக்கப்படுகின்றார்கள்.

யாத்திரிகர்கள் கங்கை நீரைப் (கங்கா தீர்த்தம்) பாத்திரங்களில் வெளியூர்களுக்கு எடுத்துச் செல்கின்றனர். கங்கை நதி மலைகளைக் கடந்து, குன்றுகளைத் தாண்டி, பாறைகளில் மோதி ஔஷதச் செடிகளையும் அணைத்து ஓடுவதால் கங்கா தீர்த்தத்தில் விஷக் கிருமிகளைக் கொல்லும் ஒருவித மின்சார சக்தி கலந்திருக்கிறதென்று அந்நீரைப் பரிசோதித்த வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர்.

பல நூற்றாண்டுகளாக குவிந்துள்ள கனவுகள் நிறைந்த நகரம்தான் பிரயாகை. புராதன இந்தியாவின் புகழைப் பரப்பும் பரத்வாஜ ஆசிரமம் அங்கிருக்கிறது. மத்தியகால இந்தியாவின் சுகந்தம் வீசும் அக்பரின் கோட்டை அங்கு காட்சியளிக்கிறது. புகழ் வாய்ந்த, தேசபக்தி நிறைந்த, துணிச்சல் மிகுந்த நேரு குடும்பத்தின் சின்னமாக — இந்திய தேசிய காங்கிரஸின் தளமாக, நவீன இந்தியாவின் நறுமணம் கமழும் ஸ்வராஜ்ய பவான் என்ற ஆனந்த பவானும் அங்குகம்பீரமாக நிற்கிறது.

### ஆயிரம் பேய்கள் வசிக்கும் வீடு

ஹாங்காங்

இங்கு ஒரு மலைச்சரிவில் உள்ள பெரிய வீட்டில் 1000 பிசாசுகள் இருப்பதாக வீட்டுச் சொந்தக்காரர் சான் குவய் என்ற கிழவர் கூறுகிறார்:- தினசரி மாலையில் அவர் "பேய்களே வீடு திரும்புங்கள்" என்று அழைக்கிறார்.

சுமார் 30 வருஷங்களில் இறந்த ஏராளமான சீனர்களின் சவப்பெட்டிகள் இந்த வீட்டில் உள்ளன. அந்தச் சவங்களின் ஆவிகள் பகலில் வெளியே போய்விட்டு இரவில் வீடு திரும்புவதாக சான் குவாய் கூறுகின்றார்.

### பத்திரமாக திரும்பியது

டாக்டர் டூஜன்ட் தலைமையில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏற முயன்ற ஸ்விட்ஜர்லாந்து கோஷ்டியினர் பத்திரமாக டில்லி திரும்பினர் 28,000 அடி உயரத்துக்குத் தாங்கள் ஏறியதாகவும் சிகரத்தைப் பிடிக்க இன்னும் 1,000 அடி தான் பாக்கியென்றும் அவர்கள் கூறினர்.

# அமைதி

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

பதைத் தெரிந்து கொள்ளாத பெண்களால் இந்த மனித குலத்திற்கு எவ்வளவோ நஷ்டம். இது நம் சமூகத்துக்கே ஒரு பெரிய சாபக்கேடு. கட்டுப்படுத்தப்படாத தொத்து நோய் மாதிரி; இந்த முட்டாள்தனம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இந்த நிலைமையில் வாழ்க்கை எப்படிச் சுகமடைய முடியும்? இந்தச் சமூகத்திற்கென்றொரு அகராதி ஏற்படுத்தினால் அதிலே மனைவி என்ற வார்த்தைக்கு அடிமை என்றுதான பொருள் கொடுக்க வேண்டிவரும் சீ! இந்தச் சமூகத்திற்கு வெட்கமே கிடையாது"

அவனுடைய பேச்சு நின்றது மழைபெய்து ஓய்ந்த மாதிரி. ஒடிந்துபோன அவனது உள்ளம் சிந்திய வார்த்தைகள் அவர்களுடைய வாழ்க்கையின் மாமத்தை வெகு இலகுவாகத திறந்து காட்டின. என்றாலும் அவனுடைய மனதை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் நான் மெதுவாகச் சிரித்துக் கொண்டு சொன்னேன் தனிமனிதனின் செய்கைக்கு ஒரு சமூகத்தைக் குறை கூறுவது தவறு என்று.

"தனிமனிதனின் செய்கையல்ல. இந்தச் சமூகத்துப் பெண்களே அப்படித்தான்" என்றான் அவன்.

பெண்கள் ஆண்களின் ஆதரவில் வாழுபவர்கள அவர்களுக்கு விளக்கம் கொடுக்க வேண்டியவர்கள் நாமதானே என்றேன.

"மாணிக்கத்தை சேற்றில மறைப்பவர்கள் அவர்கள். நம புத்திமதிகளை முந்தானையில் மறைப்பவர்களிடம் எதை எதிர்பார்க்க முடியும்?

அவனுடைய கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை எனவே சமாதானம் கூறும் பாவனையில் வாழையடி வாழையாக வந்துவிட்ட பழக்கம் அது. பொறுத்துப் போகவேண்டிய கடமை நம்முடையதுதானே! என்றேன்

"மனைவியின் கடமை தெரியாதவர்களுக்குக் கடமை செய்ய நான் தயாராயில்லை. கடமை என்ற ஒன்றுக்காக நான் என்னுள்ளத்தை உயர்த்த விரும்பவில்லை. பொறுத்துப்போக எனக்கு நேரமுமில்லை. வாழ்க்கையை விரும்பித்தான் விவாகம் செய்துக் கொண்டேன். அதவிவாகத்தில் வாழ்க்கை கிடைக்கவில்லை என்றால் நானாக ஒரு பாதையை அமைத்துக் கொண்டு வாழ்வதில்என்ன தவறு?"

அமைத்துக் கொண்ட பாதையில் வாழ்க்கை கிடைக்குமென்று எதிர்பார்க்கலாமா? என்றேன்நான்.

"இழந்த பிறகு எதிர்பார்பபதற்கு என்ன இருக்கிறது?" என்றான.

ஒன்றுமில்லாதபோது ஒரு பெண்ணை ஏன் துன்பத்தில தூக்கி எறியவேண்டும்? என்று பரிவாகக்கேட்டேன். "துன்பம்! அது அவளாக ஏற்படுத்திக்கொண்ட பாதை அதை முற்றாக அனுபவிக்க வேண்டியவள் அவள்தான். எனக்குவேண்டியது அமைதி. அவ்வளவுதான்" என்று சொல்லிவிட்டு அவன திரும்பவும் கொஞ்சம் விஸ்கியை அருந்திவிட்டுச் சொன்னான.

"அந்த அமைதிக்காக— மன ஆறுதலுக்காகத்தான் நான் குடிக்கிறேன். இந்தக் குடியினால் உள்ளத்தை மறக்கிறேன். உலகத்தை மறந்துவிடுகிறேன்; உடலையே மறந்துவிடுகிறேன்; இந்த மறதியிலே ஒரு அமைதி கிடைக்கிறது. அந்த அமைதியே எனக்குப் போதும்"

இதைச் சொல்லிவிட்டுப் பக்கத்தில் கிடந்த படுக்கையில் விழுந்து படுத்துக் கொண்டான். ரசீத்! என்றேன். பதில் கிடைக்கவில்லை. குதிரை மூச்சு விடுவதுபோல் இருந்தது அவன் விடும் மூச்சு. அவனையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். அவனுக்கும் அவன் மனைவிக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் இடை வெளியை நிரப்புவதற்கு என்னிடம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை எழுந்து நின்றேன். மணி எட்டடித்தது. திரும்பவும் ரசீத்! என்று கூப்பிட்டேன். பதில் கிடைக்கவில்லை. வருகிறேன் நண்பா! என்று சொல்லிக் கொண்டே வெளித் திண்ணைக்கு வந்தேன். நான் வருவதை அறிந்த ரசீதின் மனைவி தன் அறைக் கதவைச் சாத்திக் கொண்டாள். உலகம் இருண்டு கிடந்தது. அந்த இருளுக்குள் நுழைந்து நடந்தேன் வீட்டை நோக்கி.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் காலையில் நான் கண்விழித்தெழுந்தபொழுது என மனைவி சொன்னாள். "உங்கள் நண்பர் ரசீத் இறந்து விட்டாராம்" என்று.

என் உயிர் மயங்கியது. நீண்ட நேரத்துக்குப்பிறகு ஒரு பெருமூச்சு வெளிவந்தது. அந்த மூச்சோடு மூச்சாக வெளிவந்த வார்த்தை இதுதான்.

நீ விரும்பிய அமைதி உனக்குக் கிடைத்துவிட்டது நண்பா!

மாதவிடாய்நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ 10-0-0 மாதமான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 15-0-0 ஜெல்லி விலை ரூ. 8-8-0 (தபால் செலவு தனி)

சிலோன் ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo-11

Mfgrs. SEENU & CO., POST BOX. 1638. MADRAS-1


பிராஞ்ச்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிங்ஸ்லி** [கொழும்பு] **வெம்பிளி** [கண்டி] **நடராஜா** [நீர்கொழும்பு]

# சினிமாஸ் லிமிட்டெட்டார் திரையிடும் மகோன்னத திரை ஒவியம் !



★ இரக்கமற்ற இரும்பு நெஞ்சக்காரன் ஒருவனின் கழுகுப்பார்வைக்கு இலக்காகும் ஏழைக் குடும்பத்தின் அவல நிலை.

★ துரோகமே புரிந்தறியாத நிரபராதி வேலைக்காரன் மீது திருட்டுக் குற்றச்சாட்டு.


★ பழிக்குப் பழி வாங்க வீரப்பன் கையாளும் சதிப் படலம்.

முதலியார் வளர்ப்புப் பெண் மீது குமார் பலாத்காரம்.


குமாருக்கு விஷமளித்த து யார்? கமலாவின் காதல் என்னவாயிற்று? கொலைக்குற்றம் சாட்டப்பட்ட மோகன் கதி என்ன?

## நெஞ்சை விட்டகலாத நிகழ்ச்சிகளின் கோவை

உங்கள் அபிமானத்தைக் கவர்ந்த முதல்தர நடிகர்கள் நடித்தது.



| நடிகர்கள்: | நடிகைகள்: |
| --- | --- |
| டி. ஆர். மகாலிங்கம் | மாதுரிதேவி, |
| டி. எஸ். பாலையா, | எஸ். வரலட்சுமி, |
| எஸ்.வி. சுப்பையா, | எம்.எஸ்.திரௌபதி |
| வி. கே. ராமசாமி, | கே. ஆர். செல்லம். |
| வி. எம. ஏழுமலை, | டி. வி. குமுதினி |



# வேலைக்காரன்

**தீவொளி** [நுவரெலியா] **மோடர்ன்** [பதுளை]

---

**மைலன்**

## அபூர்வ சிந்தாமணி

பி.எஸ். கோவிந்தன்-எஸ்.வரலட்சுமி முதலியோர் நடித்தது.

**காமினியில்**

## ஸ்ரீதேவி

ரூபவதி-கருணாகுமாரி நடித்தது.


இப்பத்திரிகை கொழும்பு, தட்டாரதெரு, 196ம் இலக்கத்தில் ... அவர்களால் ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பில் 194 ... சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1952 ஜூலை 13ந் தேதியிட்டுப் பிரசுரம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org